பக்கங்கள்: பத்து

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 தை 25 வியாழக்கிழமை (07-02-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:74

# மீன்பிடித் தடையை அரசு தளர்த்தியது!

## பிரதமர் தலைமையில் நடந்த மாநாட்டின் பின் அறிவிப்பு

கொழும்பு, பெப்ரவரி7

**வடக்குக் கடலில், தொண்டமனாறுக்கும் பருத்தித்துறைக்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் மீன்பிடிக்க விதிக்கப்பட்டிருந்த தடையை அரசு தளர்த்திஇருக்கிறது. இந்தப் பிரதேசத்தில் இன்று தொடக்கம் குறிப்பிட்ட நேர வரம்பினுள் தொழில்செய்ய மீனவர்கள் அனுமதிக்கப்படுவர் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருக்கிறது.**

வடமராட்சிக் கடற் பரப்பில் மீன்பிடிக்க விதிக்கப்பட்டிருந்த தடை தளர்த்தப்பட்டிருப்பது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு நேற்று மாலை அறிக்கை ஒன்றை விடுத்தது.

மீன்பிடித் தடை தளர்வு தொடர்பாக அதில் தெரிவிக்கப்பட்டிருக்கும் விடயங்கள் வருமாறு:-

★ தொண்டமனாறுக்கும் பருத்தித்துறைக்கும் இடையிலான கடற்பகுதியில் அதிகாலை 4.30 மணி முதல் மாலை 6 மணி வரை இயந்திரங்கள் இணைக்கப்படாத படகுகள் மூலம் கடலில் 500 மீற்றர் தூரம் வரை மீன்பிடிக்க அனுமதிக்கப்படும்.

★ தொண்டமனாறுக்கும் பருத்தித்துறைக்

(10ஆம் பக்கம் பார்க்க)

# மீனவர் மறியற்போர் கைவிடப்பட்டது! கடையடைப்பு இன்று நடைபெறாது!!

யாழ்ப்பாணம், பெப்.7

யாழ்.செயலகம் மற்றும் யாழ். பிரதேச செயலகம் ஆகியவற்றின் முன்பாகக் கடந்த ஏழு தினங்களாக மீனவர்கள் மேற்கொண்டு வந்த மறியற் போராட்டம் நேற்று முடிவுக்கு வந்தது.

யாழ்.மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக பலாலி படைத்தளத்தில் கூட்டப்பட்ட அவசர கலந்துரையாடலில் மீன்பிடிக்க விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதாக படைத் தரப்பில் அறிவிக்கப்பட்டதை அடுத்து - படை அதிகாரிகளின் கோரிக்கையை ஏற்று - தாங்கள் போராட்டத்தை தற்காலிகமாகக் கைவிட மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் இணங்கினர்.

யாழ்.மாவட்டப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் லால் விஜயசூரிய தலைமையில் நடந்த இந்தக் கலந்துரையாடல் சுமார் மூன்று மணி நேரம் நீடித்தது.

இந்தக் கலந்துரையாடலுக்கு மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் படை அதிகாரிகளால் அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களை இந்து விவ

(02ஆம் பக்கம் பார்க்க)

## அரசு - புலிகள் பேச்சு மாலைதீவில்?

புதுடில்லி, பெப்.7

ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேரடிப் பேச்சு இந்து சமுத்திரத் தீவுக்கூட்டமான மாலைதீவில் நடைபெறும்?

இருதரப்பு நேரடிப்பேச்சுக்கு உகந்த இடமாக மாலைதீவு அமையும் என்று அதிகார பூர்வ வட்டாரங்களை மேற்கோள்காட்டி இந்தியாவில் வெளியாகும் 'இந்துஸ்தான் ரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

இருதரப்பு நேரடிப் பேச்சுக்கள் தென்னிந்திய நகரம் ஒன்றில் நடைபெறுவதையே தாங்கள் விரும்புவதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். ஆனால் புலிகளின் பிரதிநிதிகள் தமது நாட்டில் தங்கியிருந்து பேச்சில் ஈடுபடுவதற்கு இந்திய அரசியல்வாதிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

புலிகளின் கோரிக்கைக்கு இந்தியத் தரப்பில் இருந்து ஆட்சேபம் காட்டப்பட்டிருப்பதை அடுத்து மாலைதீவில் பேச்சை நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து தற்சமயம் ராஜதந்திர வட்டாரங்களில் ஆராயப்பட்டு வருகிறது. எனினும் அது தொடர்பாக முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை - என்று 'இந்துஸ்தான் ரைம்ஸ்' தகவல் வெளியிட்டிருக்கிறது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத்தை எட்டுவதில் இருதரப்பும் மிக உறுதி

# இந்த வருட நடுப்பகுதியில் நேரடிப் பேச்சு; அப்போது நோர்வே மத்தியஸ்தம் வகிக்கும்

## அந்நாட்டுப் பிரதமர் தெரிவிப்பு

மட்றிட், பெப்ரவரி7

**இலங்கை அரசுத் தரப்புக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேரடிப் பேச்சுக்களை இந்த வருட நடுப்பகுதியில் ஆரம்பித்துவிட முடியும் என நம்புகிறோம். தற்போது ஏற்பாட்டாளராகப் பணியாற்றும் நோர்வே, அச்சமயம் நடுநிலையான மத்தியஸ்தராகச் செயற்படும்.**

**- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் நோர்வே பிரதமர் ஹெஷல் மக்னே வொண்டெவிக்.**

நேற்று ஸ்பெயின் நாட்டுக்கு விஜயம் செய்த சமயம் பி.பி.ஸியின் முன்னாள் கொழும்புச் செய்தியாளர் ஒருவரோடு பிரதமர் வொண்ட்டெவிக் இலங்கை நிலைவரம் குறித்து உரையாடினார்.

இலங்கை இனநெருக்கடிக்குத் தீர்வுகாண நோர்வேயின் ஏற்பாட்டில் எடுக்கப்பட்டுவரும் முயற்சிகளின் தற்போதைய நிலைவரத்தை அச்சமயம் அவர் விளக்கினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் புதிய ஆட்சி ஏற்பட்டிருக்கிறது. 20 ஆண்டு கால கடும் யுத்தத்தின் பின்னர் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த புதிய அரசு உறுதிகொண்டுள்ளது.

விடுதலைப் புலிகளும் அரசும் ஒருதலைப்பட்சமாக அறிவித்திருக்கும் யுத்தநிறுத்தமும் மோதல் தவிர்ப்பும் நீடிக்கப்பட்டிருப்பது சமாதானம் குறித்த ஊக்கத்தையும் நம்பிக்கையையும் அளித்துள்ளது.'

புதிய அரசு பதவியேற்றதும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகளை நீக்கியமை சமாதானம் ஏற்படுவதற்கான அதிக நம்பிக்கையைத் தருவதாக அமைந்துள்ளது. இத்தகைய நடவடிக்கைகள் இரு தரப்பினிடமும் பெரிதும் நம்பிக்கையை உருவாக்கி

(10ஆம் பக்கம் பார்க்க)

## கண்டி வீதியைத் திறக்க வசதியாக

# ஓமந்தையில் இரு தரப்பினரும் கண்ணிகளை அகற்றுகின்றனர்

வவுனியா, பெப்.7

வன்னிக்கான ஏ-9 கண்டி வீதியைத் திறக்கும் நோக்குடன் ஓமந்தைப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணிகளை அகற்றும் பணியை இராணுவத்தினரும் விடுதலைப் புலிகளும் ஆரம்பித்துள்ளனர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் ஆதரவுடன் ஓமந்தையில் இராணுவத்தினர் நேற்று இப்பணியை ஆரம்பித்தனர். விடுதலைப் புலிகள் கடந்த புதனன்றே இப்பணியை ஆரம்பித்துவிட்டதாக செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கண்டி வீதியை மக்கள் போக்குவரத்துக்குத் திறந்துவிடும் நோக்குடனேயே இந்த கண்ணிவெடியகற்றும் பணி இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை -

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு உயிலங்குளம் ஊடாகவும் ஒரு பாதையைத் திறக்கும் நோக்குடன் அங்கும் கண்ணிகள் அகற்றப்படவுள்ளன. இந்தப் பணிகள் இன்று ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# குடும்பப் பெண் மீது வல்லுறவுக்கு முயற்சித்த சிப்பாய் சிக்கினார்!

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா, பெப்.7

வவுனியா செட்டிகுளம் பகுதியில் 40 வயதான குடும்பப் பெண் ஒருவரை வல்லுறவுக்கு உட்படுத்த முயன்ற சிப்பாய் ஒருவரைப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று மாலை 4 மணியளவில் செட்டிகுளம் மகாவித்தியாலயப் பகுதியில் உள்ள குளத்தில் குளிக்கச் சென்ற சிப்பாய், அங்கு தண்ணீர் அள்ளிக்கொண்டு அப்பகுதியில் தனிமையில் சென்று கொண்டிருந்த குடும்பப் பெண் ஒருவரை வழிமறித்து பலாத்காரமாக அவருடன் பாலியல் வல்லுறவு புரிய முயற்சித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அப்பெண் கூக்குரலிடவே அங்கு விரைந்து வந்த அயலவர்கள் சந்தேகநபரான சிப்பாயை மடக்கிப் பிடித்து பிரஜைகள் குழு மூலம் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

குறிப்பிட்ட பெண் செட்டிகுளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்

(02ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர்களுடன் இன்றும் கலந்துரையாடல்

குருநகர், பெப்.7

யாழ். குடாக்கடலேரியில் மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் குறித்து மீனவர் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதற்கான கூட்டம் ஒன்று 512ஆவது படையணித் தலைமையகத்தில் இன்று காலை 10 மணிக்கு நடைபெற உள்ளது.

குருநகர், பாஷையூர் மீனவர் பிரதிநிதிகளும், பொது அமைப்புகளின்

(10ஆம் பக்கம் பார்க்க)

# மீண்டும் முகவர்கள் ஊடாக மண்ணெண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம், பெப்.7

குடாநாட்டில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் ஊடாக மண்ணெண்ணெய் விநியோகம் இன்று மீண்டும் ஆரம்பமாக உள்ளது.

இது விடயமாக அரச அதிபருடன் கலந்துரையாடி முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் நேற்று இரவு தெரிவித்தார்.

மண்ணெண்ணெய்க்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டை அடுத்து தனியார் முகவர்களுக்கான விநியோகம் நிறுத்தப்பட்டதும் -

ப.நோ.கூ.சங்கங்கள் ஊடாக புங்கீட்டு அட்டைப்படையில் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்பட்டு வருவதும் - தெரிந்ததே.

(ஐ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

யுத்தத்தை நிறுத்தி சமாதானப் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்க வேண்டும் எனக் கோரி கடந்த மூன்றாம் திகதி மட்டக்களப்பில் இடம்பெற்ற சமாதானப் பேரணியின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.




# 6 சபைகளில் போட்டியிடுவதற்காக சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம்

யாழ்ப்பாணம்,பெப்.7

குடாநாட்டில் உள்ள ஆறு உள்ளூராட்சிச் சபைகளில் போட்டியிடுவதற்காக சுயேச்சைக் குழுக்கள் நேற்றுக் கட்டுப்பணம் செலுத்தின.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்களை ஏற்கும் பணிகளை யாழ்.தேர்தல் திணைக்களம் கடந்த முதலாம் திகதி ஆரம்பித்தபோதும், நேற்றே கட்டுப் பணம் செலுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

யாழ்.மாநகரசபை மற்றும் வலி. தெற்கு, வலி.வடக்கு, நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை பிரதேச சபைகள் ஆகியவற்றில் போட்டியிடுவதற்கே கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

வலி.தெற்குப் பிரதேச சபைக்கு அபிமன்னசிங்கம் மாணிக்கசோதி தலைமையிலான சுயேச்சைக்குழுவும், யாழ்ப்பாண மாநகர சபைக்கு சுல்தான் அப்துல்காதர் (முபீன்) தலைமையிலான சுயேச்சைக் குழுவும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன.

ஐ.தே.கட்சி, ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்.(வரதர் அணி) ஆகியன இன்று வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளன.

தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு சுயேச்சைக் குழுவாக சகல சபைகளுக்கும் நாளை வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யவிருப்பதாக கூட்டமைப்புப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

(ம-3-10-180)

## எரிபொருள் கப்பல் வருவது தாமதம்

# குடாநாட்டு மின் விநியோகம் முற்றாக ஸ்தம்பிக்கும் ஆபத்து!

யாழ்ப்பாணம்,பெப்.7

மின்சாரசபைக்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்படும் ஜெனரேட்டருக்கான எரிபொருள் அடுத்த ஓரிரு தினங்களுக்குள் கிடைக்காவிட்டால் குடாநாட்டில் மின் விநியோகம் முற்றாகச் சீர்குலையும்.

மின்சார சபையின் உயர் அதிகாரி ஒருவர் இவ்வாறு முன்னெச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கான எரிபொருளை ஏற்றிக் கொண்டு இன்று கப்பல் ஒன்று இங்கு வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்பார்க்கப்பட்டபடி அந்தக் கப்பல் இங்கு வந்து சேர்ந்தால் மின்சார சபைக்கான எரிபொருள்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் என்றும் -

இல்லையேல் மின் விநியோகத்தை முற்றாக நிறுத்த வேண்டிய நிலை ஏற்படலாம் என்றும் -

மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த சில தினங்களுக்கு முன் நிலவிய காலநிலை சீர்கேடு காரணமாக எரிபொருள் கப்பல் இங்கு வந்து சேர்வதில் தாமதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

கையிருப்பில் உள்ள எரிபொருள தீர்ந்து வருவதை அடுத்து சுன்னாகம் மின் நிலையம், 'கூல் எயார்' நிறுவனம் ஆகிய இடங்களில் இருந்து மின் பெறும் பிரதேசங்களில் பகல் நேர மின்வெட்டை மின்சாரசபை நேற்றுமுன்தினம்முதல் அமுல் செய்து வருகிறது.

காலை 9 மணிமுதல் மாலை 5மணி வரை இந்த மின்வெட்டு அமுல் செய்யப்படுகிறது.

'கூல் எயார்' மற்றும் சுன்னாகம் மின் நிலையம் ஆகியவற்றின் பாரிய ஜெனரேட்டர்களை இயக்க நாள் ஒன்றுக்கு 55 ஆயிரம் லீற்றர் ஓட்டோ மஸல் தேவை என்றும் -

தற்போது கையிருப்பில் உள்ள எரிபொருள் மூலம் மின்வெட்டை அமுல் செய்யாது மின் விநியோகத்தை மேற்கொண்டால், அடுத்த 3தினங்கள் மட்டுமே பாவனையாளர்களுக்கு மின்னை வழங்கமுடியும் என்றும் - மின்சார சபை வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன. (ஐ-180)

# திருநெல்வேலி வர்த்தகர் மீதான வழக்கு மேல் நீதிமன்றத்துக்கு!

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் யாழ்.சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் திருநெல்வேலியைச் சேர்ந்த வர்த்தகரான மகேந்திரநாதன் சங்கரின் வழக்கு யாழ். மேல்நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இவரது வழக்கு யாழ்.நீதிமன்றில் எடுக்கப்பட்டபோது இந்த வழக்கு மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டது தொடர்பான விவரம் காங்கேசன்துறை பயங்கரவாதத் தடுப்புப் பொலீஸ் பொறுப்பதிகாரியினால் தெரிவிக்கப்பட்டது.

மேல்நீதிமன்றில் எதிர்வரும் 21ஆம் திகதி இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

(ம-10-180)

## 1996இல் கைதடி சுற்றிவளைப்பில் கைதாகி

# காணாமற் போனவர்களின் விசாரணையில் சாட்சியம் கூற விடுவிக்கப்பட்டோர் மறுப்பு

யாழ்ப்பாணம்,பெப்.7

1996இல் கைதடி சுற்றிவளைப்பின் போது படையினரால் கைது செய்யப்பட்டு, காணாமற்போன 23 பேரின் விசாரணைக்கு சாட்சியம் கூறுவதற்கு இவர்களுடன் அப்போது கைது செய்யப்பட்டு ஏற்கனவே விடுவிக்கப்பட்டவர்கள் மறுப்புத் தெரிவித்துள்ளதாக விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ள உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த 23பேரின் விசாரணைக்கென யாழ்ப்பாணம் வந்துள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இச்சுற்றிவளைப்பின்போது கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டோரில் குறைந்தது 5 பேரையாவது இவ்விசாரணைக்கு அழைத்துவரும்படி விசாரணைக்கு வந்திருந்த உறவினர்களுக்கு அறிவித்திருந்தனர். ஆனால் விடுதலை செய்யப்பட்டோரில் எவரும் இவ்விசாரணைக்குச் சாட்சிகூற அடியோடு மறுத்துவிட்டதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

1996இல் கைதடியில் படையினரால் ஒருவர் கைது செய்யப்பட்டதைத் தாம் நேரில் கண்டதாக சாட்சி கூறிய கோமஸ்வரன் என்ற இளைஞர் கடந்த 5வருடங்களுக்கு முன் கைது செய்யப்பட்டு இன்று வரை அவர் குறித்து தகவல் ஏதும் இல்லை.

இதனைச் சுட்டிக்காட்டியே இவர்கள் சாட்சியம் கூறுவதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளதாக அவர்கள் மேலும் கூறினர். (க-8)

## திருமுறை ஓதல்

யாழ்ப்பாணம்,பெப்.7

இணுவில் பிரதான வீதியில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தில் கடந்த தைப்பூசத் தினம் முதல் தினமும் மாலை 4 மணியளவில் பன்னிரு திருமுறை முற்றோதல் நிகழ்வு நடைபெற்று வருகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை முதலாம் திருமுறை ஓதுதல் முடிவுற்றது. தொடர்ந்து இரண்டாம் திருமுறை ஓதுதல் ஆரம்பமாகித் நடைபெற்றுவருகிறது. (ம)

## இல்ல மெய்வன்மை போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.7

அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம், அச்செழு மெ.மி.த.க. பாடசாலை ஆகியவற்றின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் இ.குணநாதன் தலைமையில் வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக இந்து சமயவிவகார அமைச்சர் தி.மகேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் மற்றும் வர்த்தகர்களான ப.சிவபாஸ்கரன், ச. புவிச்சந்திரன் ஆகியோரும் கலந்துகொள்வர். (க-8)

## சிந்தனை அரங்கு

யாழ்ப்பாணம்,பெப்.7

யாழ். ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கமும் யாழ்.பல்கலைக் கழகத் தமிழ் மன்றமும் இணைந்து நடத்தும் சிந்தனை அரங்கு நாளை வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி முதல் யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறும்.

'இலக்கண வித்தகர் பண்டிதர் இ.நமசிவாயதேசிகர் - ஒரு பார்வை', 'தமிழியல் ஆய்வில் பேராசிரியர் க. கைலாசபதி' ஆகிய தலைப்புகளில் பேராசிரியர் நா.சுப்பிரமணியம் உரையாற்றுவார். (ஐ)

## கொழும்புத்துறை வீதியோரப் பற்றைகள் அழிக்கப்படுகின்றன

அரியாலை,பெப்.7

கொழும்புத்துறை மேற்கு பகுதியிலுள்ள வீதிகளின் இரு மருங்கிலும் வளர்திருந்த பற்றைகளை வெட்டித் துப்புரவாக்கும் பணிகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுவாமியார் வீதி, விபுலானந்தர் வீதி, பூங்கன்குளம் வீதி, கந்தர் மணியம் வீதி, இலந்தைக்குளம், வளன்புரம் போன்ற பகுதிகளிலேயே பற்றைகள் மற்றும் செடி, கொடிகள் அழிக்கப்பட்டு வருகின்றன.

இந்த வீதியோரங்களில் காணப்படும் பற்றைகளை அழித்து, துப்புரவு செய்து தருமாறு கொழும்புத்துறை மேற்கு இந்து இளைஞர் மன்றம் யாழ்.மாநகர மேயரை நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது. (க-17)

# இலங்கை வங்கி சாவகச்சேரிக் கிளையில் ஓய்வூதியம் பெறுவோருக்கு புதிய ஏற்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.7

இலங்கை வங்கியின் சாவகச்சேரிக் கிளையில் ஓய்வூதியம் பெறுபவர்களின் கொடுப்பனவை வழங்க புதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று இலங்கை வங்கியின் மாவட்ட முகாமையாளர் சி.நடராஜசிங்கம் தெரிவித்தார்.

புதிய ஏற்பாடுகளின்படி -

இதுவரை காலமும் யாழ்ப்பாணத்தில் இயங்கிய வங்கியின் சாவகச்சேரிக் கிளையிலும் பருத்தித்துறைக் கிளையிலும் ஓய்வூதியம் பெற்றவர்களுக்கு இம்மாதம் அச்சுவேலியில் இயங்கும் வங்கிக் கிளையிலேயே ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கப்படவிருக்கின்றது என்று அவர் கூறினார்.

எதிர்வரும் மாதங்களில் ஓய்வூதியர்கள் அச்சுவேலியில் அல்லது யாழ்ப்பாணத்தில் உள்ள கிளை அலுவலங்களிலும் கொடுப்பனவைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்றும் -

யாழ்நகரில் ஓய்வூதியம் பெற விரும்புபவர்களுக்கு யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையில் ஓய்வூதிய நாளன்றும் மறுநாளும் கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.(ம-3)

## பெற்றோல் விநியோகத்தில் மோசடி செய்த மூவர் இடைநிறுத்தம்

தென்மராட்சி,பெப்.7

கட்டைவேலி - நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிலையத்தில் பெற்றோல் விநியோகத்தில் மோசடி செய்ததாகக் கூறப்படும் மூன்று பணியாளர்கள் தற்காலிக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-117)

## நிறுவன தினமும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும்

யாழ்ப்பாணம்,பெப்.7

ஐ.ஐ.எஸ். நிறுவனத்தின் ஆறாவது ஆண்டு நிறுவன தினமும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் சென்.ஜோன்ஸ் கல்லூரி ஜூபிலி மண்டபத்தில் நிறுவன இயக்குநர் கே.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவிருக்கின்றன.

வழமைபோல் இவ்வாண்டும் சிறப்புச் சித்திபெய்திய மாணவர்களுக்கு சிறப்பு விருதுகள் வழங்கப்படவிருக்கின்றன.

திருநாவுக்கரசு ரமணன் என்னும் மாணவன் தங்கப்பதக்கம் பெறுகிறார்.

செல்வி கமலினி சுந்தரமூர்த்தி, சங்கரலிங்கம் காந்தரூபன், செல்வி ஜெம்மா தேவகி மரியதாஸன், செல்வி தர்ஷினி சண்முகலிங்கம், செல்வி பக்தகௌரி செல்வரத்தினம், திருமதி சங்கீதா பிரபாகரன், கந்தையா காந்தரூபன் ஆகியோர் சிறப்பு விருதுகளைப் பெறுகின்றனர். (ம-3)

## மீனவர் மறியற்போர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கார அமைச்சர் தி.மகேஸ்வரன் பலாலிக்கு அழைத்துச் சென்றார்.

மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகள், புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தை வண.பிதா அ.ஜெயசேகரம் அடிகள் மற்றும் இராணுவ அதிகாரிகள், கடற்படை அதிகாரிகள் ஆகியோரும் நேற்றைய கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

மீனவர்களின் பிரச்சினைகள் பற்றி அங்கு விரிவாக ஆராயப்பட்டது. தற்போது மீன்பிடிக்கக் கட்டுப்பாடு விதிக்கப்பட்ட சில பகுதிகளில் மீன்பிடிப்பதற்கு அனுமதிப்பதாகப் படை அதிகாரிகள் அறிவித்தனர்.

கடந்த 6மாதங்களுக்கு மேலாக மீன்பிடித் தடை விதிக்கப்பட்டிருந்த திக்கம் தொடக்கம் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி வரையான கடற்பகுதியில் அதிகாலை 4 மணி முதல் 6 மணி வரையும், பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணி வரையும் மீன் பிடிப்பதற்கு அனுமதி வழங்குவதாக அறிவிக்கப்பட்டது. ஆயினும் வடமராட்சியில் அக்கரை, கெருடாவில் மற்றும் தொண்டமனாறு வரையான பகுதிகளில் மீன்பிடிப்பதற்கு இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை. தற்பொழுது மீன் பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ள பகுதிகளில் காணப்படும் நடைமுறையை அவதானித்த பின்னர், அடுத்துவரும் நாள்களில் மேலும் சில தளர்வுகளை ஏற்படுத்துவதாகப் படை அதிகாரிகள் உறுதி அளித்தனர்.

மீன்பிடித் தடையைத் தளர்த்துவதாகப் படை அதிகாரிகள் வழங்கிய உறுதிமொழியை மீனவர் சங்கப் பிரதிநிதிகள் முதலில் ஏற்றுக்கொள்ள மறுத்தனர்.

தங்களின் நியாயமான கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேறும் வகையில் மீன்பிடித் தடை முற்றாக நீக்கப்படவேண்டும் என்று கடைசி வரை மீனவர் பிரதிநிதிகள் வற்புறுத்தினர். தற்போது படையினர் அனுமதித்துள்ள மீன்பிடித் தளர்வு நேரம் போதாது. அதற்குள் தொழில் புரிவது சாத்தியமற்றது என்று மீனவர்கள் வாதாடினர்.

எனினும் படிப்படியாகத தடைகள் தளர்த்தப்பட்டு காலப்போக்கில் முற்றாக நீங்கிவிடும் என்று படைத் தரப்பில் கூறப்பட்ட உறுதி மொழியை கடைசியில் மீனவர்கள் ஏற்றுக்கொண்டனர்.

இதன் பின்னர் கலந்துரையாடலை முடித்துக்கொண்டு யாழ்.திரும்பிய அவர்கள், மறியற் போராட்டத்தைக் கைவிடுவதாக அறிவித்தனர்.

மீனவர்களின் மறியற்போர் முடிவுக்கு வந்திருப்பதை அடுத்து, மீனவர் போராட்டத்துக்கு ஆதரவாக இன்று குடாநாட்டில் நடத்தப்படவிருந்த கடையடைப்புப் போராட்டமும் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் நேற்று மாலை செய்திக் குறிப்பு ஒன்றை விடுத்தது.

மீனவர் போராட்டத்துக்கு தமது பங்களிப்பையும் ஆதரவையும் நல்கிய யாழ்மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் மற்றும் ஏனைய அமைப்புகள், தனிநபர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ-3-9-10-15-51-180)

## குடும்பப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் தொடர்புடையவரெனக் கூறப்படும் இராணுவச் சிப்பாயைத் தமது பொறுப்பில் எடுப்பதற்கு இராணுவத் தரப்பு நேற்றுக் கடும் முயற்சி எடுத்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் அதற்கு இடங்கொடுக்காத பொலீஸார், அந்தச் சிப்பாயைத் தொடர்ந்தும் தமது கட்டுப்பாட்டில் வைத்து விசாரித்து வருகின்றனர்.

இந்தச் சம்பவம் குறித்து வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனுக்கு பிரஜைகள் குழு முறையிட்டுள்ளது.

(ம-9)

# செய்தியாளர் கடத்தப்பட்டதில் 'ஜெய்ஸி மொஹமட்' தொடர்பு!

## பாகிஸ்தானியப் பொலீஸார் தெரிவிப்பு

கராச்சி,பெப்.7

பாகிஸ்தானில் அமெரிக்கச் செய்தியாளர் கடத்தப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் காஷ்மீரத் தீவிரவாத அமைப்பான ஜெய்ஸி மொஹமட் இருப்பதாக பாகிஸ்தானிய் பொலீஸார் தெரிவித்தனர்.

'வோல்ஸ்ரீட் ஜோர்னல்' பத்திரிகையின் செய்தியாளர் டானியல் பேர்ல் இரு வாரங்களின் முன்னர் கராச்சி நகரில் வைத்து அடையாளம் தெரியாத சிலரால் கடத்தப்பட்டார். 38 வயதான பேர்ல் கடத்தப்பட்டு பணயம் வைக்கப்பட்டிருப்பதை காட்டும் புகைப்படங்களை சர்வதேச செய்தி ஊடகங்களுக்கு மின் அஞ்சல் மூலம் அனுப்பியர்வர்கள் என்று கூறப்படும் மூவரைத் தாம் கைது செய்து விசாரித்தபோதே செய்தியாளர் கடத்தப்பட்டதில் ஜெய்ஸி மொஹமட் இயக்கம் சம்பந்தப்பட்டிருப்பது தெரியவந்ததாக பாகிஸ்தானிய பொலீஸார் கூறினர்.

'மொஹமட்டின் இராணுவம்' என்று அர்த்தப்படும் ஜெய்ஸி மொஹமட் அமைப்பு பாகிஸ்தானில் தடை



டானியல் பேர்ல்

செய்யப்பட்ட இயக்கமாகும். காஷ்மீர் விடுதலைக்காக இந்திய அரசை எதிர்த்துப் போராடுவதாகக் கூறும் இந்த அமைப்பினர் பாகிஸ்தானைத் தளமாகக் கொண்டே இயங்கிவந்தனர். இந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படும் மூவரே பாகிஸ்தானியப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

செய்தியாளர் கடத்தப்பட்டதற்கும் தமக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும் -

யாரோ சிலர் தம்மிடம் புகைப்படங்களையும் மின் அஞ்சல் முகவரிகளையும் தந்து அவற்றை அனுப்பும்படி கூறியதாகவும் -

பேர்ல் கடத்தப்பட்டது குறித்து தாம் எதுவும் அறியாததால், அந்தப் புகைப்படங்களை மின் அஞ்சல் மூலம் அனுப்பியதாகவும் -

கைதான மூவரும் பொலீஸாரிடம் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையில் பேர்ல் பணயம் வைக்கப்பட்டுள்ள இடத்தைக் கண்டுபிடிப்பதில் எவ்வித முன்னேற்றமும் இல்லை என்று பாகிஸ்தானிய அரசு தெரிவித்துள்ளது. (ஓ)

# 14ஆண்டுகளாக நடக்கும் அமெரிக்கப் பெண்மணி

கொல்கத்தா,பெப்.7

அமெரிக்காவைச் சேர்ந்த லெடொப்ஸ்கி (வயது39) என்ற பெண்மணி மார்பகப் புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வுவை ஏற்படுத்துவதற்காக கடந்த 14ஆண்டுகளாக உலகம் முழுவதும் நடைபயணம் மேற்கொண்டுள்ளார்.

அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் தனது நடைபயணத்தை தொடர்ந்து நடத்திய லெடொப்ஸ்கி தற்போது இந்தியா வந்துள்ளார்.

கொல்கத்தாவில் தங்கியுள்ள அவர் அடுத்து மும்பை நகரத்துக்குச் செல்லத் திட்டமிட்டுள்ளார்.

கடந்த 14 வருடங்களாக நடைப்பயணம் மேற்கொண்டுவரும் லெடொப்ஸ்கி, ஒவ்வொரு நாளும் 20 முதல் 25கிலோ மீற்றர்கள் தூரம் வரை நடக்கிறார்.

அமெரிக்காவில் மார்பகப் புற்றுநோயால் பெண்கள் பாதிக்கப்படுவது அதிகரித்திருந்ததே தனது நடைபயணத்துக்குத் தூண்டுகோலாக இருந்ததாக அவர் தெரிவித்தார். (ஓ)





பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் ஆர்ஜென்ரீனாவில் வேலை தரும்படி அரசைக் கோரி வேலையற்றோர் ஆயிரக்கணக்கில் திரண்டு நேற்றுமுன்தினம் நடத்திய பேரணி இது.

# சதாமுக்கு எதிராகக் கலகம் ஏற்படுத்த அமெரிக்காவிடம் சவூதி கோரிக்கை

வாஷிங்ரன்,பெப்.7

ஈராக்கில் அதிபர் சதாம் ஹுசைனுக்கு எதிராகக் கலகம் ஒன்றை ஏற்படுத்த உதவுமாறு கடந்த 10 ஆண்டுகளாக அமெரிக்காவை சவூதி அரேபியா கோரிவருவதாக சவூதி அரேபியாவின் முன்னாள் புலனாய்வுத் துறைத் தலைவர் இளவரசர் தூர்க்கி அல் பைஸல் தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

அமெரிக்கா, ஈராக் மீது படையெடுப்பு நடத்தினால் அது இஸ்லாமிய உலகின் கோபத்தைத் தூண்டும் என்றும் -

அதற்குப் பதிலாக அதிபர் சதாமுக்கு எதிராகப் புரட்சி ஒன்றை உருவாக்க உதவுமாறும் -

சவூதி அரேபியா தற்போதும் அமெரிக்காவிடம் வலியுறுத்தி வருவதாக பைஸல் மேலும் தெரிவித்தார்.

பயங்கரவாத எதிர்ப்புப்போரின் அடுத்த இலக்காக ஈராக் இருக்கக்கூடும் என்ற ஊகங்கள் எழுந்துள்ள நிலையில், சதாமுக்கு எதிரான புரட்சி பற்றிய தகவல்கள் வெளியாகியிருப்பது இஸ்லாமிய நாடுகளில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

ஐநாவுடனும், ஐரோப்பிய ஒன்றியத்துடனும் அதிபர் சதாம் இணக்கமான போக்கைக் கடைப்பிடிக்க ஆரம்பித்துள்ளார். இந்த நிலையில் ஈராக் மீது பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை என்ற பெயரில் தாக்குதல் நடத்தத் தகுந்த காரணங்களை அமெரிக்கா தேடிப்பிடிக்க வேண்டியிருக்கும் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஆகவே சவூதிஅரேபியாவின் வேண்டுகோளை ஏற்று, புரட்சி மூலம் சதாம் ஹுசைனை பதவியிலிருந்து அகற்றும் திட்டத்தை அமெரிக்கா செயற்படுத்தக்கூடும் என்று கருதப்படுகிறது. (ஓ)

# அமெரிக்காவைத் தாக்கியவர்கள் தனது பிரஜைகள் என சவூதி ஒப்புதல்

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் அமெரிக்காவில் இடம்பெற்ற விமானத் தற்கொலைத் தாக்குதல்களுக்குப் பிறகு, அந்தத் தாக்குதலில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 19 விமானக் கடத்தற்காரர்களில் 15 பேர் தமது நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று சவூதிஅரேபியா முதன்முறையாகப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளது.

ரியாத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் சவூதிஅரேபிய உள்துறை அமைச்சர் இளவரசர் நைபக் இதனை உறுதிப்படுத்தினார்.

தாக்குதல் நடந்த பிறகு, விமானங்களைக் கடத்தியவர்களில் 15பேர் சவூதி அரேபியர்கள் என்று அமெரிக்க அதிகாரிகள் கூறியபோதும், அவர்கள் தமது நாட்டைச் சேர்ந்தவர்களா என்பது சந்தேகத்துக்குரியது என்று சவூதிஅரேபியா பல தடவைகள் கூறி வந்தது.

இந்தத் தாக்குலுக்கு முக்கிய காரணகர்த்தா என்று கருதப்படும் ஒஸாமா பின்லேடனின் குடியுரிமையை சவூதி அரேபியா 1994ஆம் ஆண்டு ரத்துச்செய்தது குறிப்பிடத்தக்கது. (ஓ)

# பலஸ்தீன விடுதலை இயக்கத்தில் பிளவு! இரண்டாவது பெரிய குழு வெளியேறியது!!

## யஸீர் அரபாத் மீது அழுத்தம் அதிகரிப்பு

ஜெருசலேம்,பெப்.7

யஸீர் அரபாத் தலைமையிலான பலஸ்தீன விடுதலை இயக்கத்தில் அங்கம் வகித்த குழுக்களில் இரண்டாவது பெரிய குழு தனது அங்கத்துவத்தை நிறுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது.

இஸ்ரேலியர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பாக பலஸ்தீனப் பொலீஸார் தமது தலைவரை படி பலஸ்தீனப் பொலீஸார் கைது செய்திருந்தனர்.

தமது தலைவரை விடுதலை செய்யும் வரை யஸீர் அரபாத் தலைமையிலான நிர்வாகக் குழுக் கூட்டங்களில் தாம் கலந்துகொள்ளப்போவதில்லை என்று பலஸ்தீன விடுதலை மக்கள் முன்னணியின் அரசியல் தலைமைப்பீடம் தெரிவித்துள்ளது.

பலஸ்தீன விடுதலை இயக்கத்தில் அங்கம் வகிக்கும் குழுக்களில் யஸீர் அரபாத்தின் 'பதாஹ்' குழுவே மிகப் பெரியதாகும். அதனையடுத்த பெரிய குழுவாக பலஸ்தீன விடுதலை மக்கள் முன்னணி உள்ளது.

இஸ்ரேலை எதிர்த்து நிற்குமாறு பல்வேறு பலஸ்தீன தீவிரவாதக் குழுக்களும் யஸீர் அரபாத்தை வற்புறுத்தி வருகின்றன. அதேசமயம் தீவிரவாதிகளை அடக்குமாறு சர்வதேச நிர்ப்பந்தம் அரபாத் மீது அதிகரித்து வருகிறது. அதேசமயம் கடந்த 16 மாத கால இஸ்ரேல் - பலஸ்தீன மோதல்கள் முடிவடையும் என்ற நம்பிக்கையும் தற்போது தளர்ந்து வருவதாகக் கூறப்படுகிறது. (ஓ)



இஸ்ரேலிய எதிர்ப்பு வாசகங்களை சுவரொன்றில் வரையும் பலஸ்தீனரைப் படத்தில் காணலாம். அருகே துப்பாக்கிகளுடன் பலஸ்தீனப் போராளிகளும் காணப்படுகின்றனர்.

கைது செய்ததாலேயே பலஸ்தீன விடுதலை இயக்கத்திலிருந்து தமது அங்கத்துவத்தை தாம் நிறுத்தியுள்ளதாக அந்தக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

பலஸ்தீன விடுதலை மக்கள் முன்னணி என்ற அந்த அமைப்பின் தலைவர் அஹமத் சதாத்தை பலஸ்தீன அதிகார சபையின் உத்தரவுப்

# 'அமெரிக்கத் தலிபான்' மீது மேலும் குற்றச்சாட்டுகள்

## வேர்ஜினிய நீதிமன்றத்தில்

லண்டன்,பெப்.7

ஆப்கானிஸ்தானில் தலிபான்களுடன் இணைந்து போராடியதாக அமெரிக்கப்படையினரால் கைது செய்யப்பட்டு குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஜோன் வோக்கர் லிந் மீது மேலும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

தீவிரவாதிகளுடன் இணைந்து அமெரிக்கர்களை கொன்றதாக அமெரிக்கப் பிரஜை மீது குற்றஞ்சாட்டி வழக்குத் தொடருவது அமெரிக்க அரசுக்கு அசாதாரண மான விடயமாகும்.

கடந்த மாதம் வேர்ஜினிய நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட சமயம் அவர் மீது -


- அமெரிக்கப் பிரஜைகளைக் கொல்லக் கூட்டுச்சதி செய்தல்.
- வெளிநாட்டுத் தீவிரவாதிகளுக்கு பொருள் மற்றும் வளங்களைக் கொடுத்து உதவுதல்.
- தலிபான்களுக்கு சேவை செய்தல்.

ஆகிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன.

நேற்று நீதிமன்றத்தில் வோக்கர் ஆஜர்படுத்தப்பட்ட போது அவர் மீது மேலதிகமாக சில குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

- அல்கெய்டாவுக்கு சேவை செய்தல்.
- தீவிரவாத இயக்கங்களுக்கு இடையிலான தொடர்புகளில் ஈடுபடல்.
- தலிபான்களுக்காக ஆயுதங்கள் மற்றும் வெடிப் பொருள்களை கடத்துதல்.

ஆகிய இந்தக் குற்றச்சாட்டுகளே வோக்கர் மீது புதிதாகச் சுமத்தப்பட்டுள்ளன.



வோக்கர்

கலிபோர்னிய முஸ்லிமான இருபது வயது வோக்கர் ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவின் பயங்கரவாதத்துக்கு எதிரான போரின் போது கைது செய்யப்பட்டு, பின்னர் அமெரிக்காவுக்கு கொண்டுவரப்பட்டவராவார். வோக்கர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு பல ஆயுள் தண்டனைகள் விதிக்கப்படலாம்.

ஆயினும் வோக்கர் அமெரிக்க இராணுவத்துடன் மோதியதாகவோ, அமெரிக்கர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவோ எந்தவித ஆதாரங்களும் அமெரிக்க அரசிடம் கிடையாது என்று அவரது சட்டத்தரணிகள் தெரிவிக்கின்றனர்.

தவிர்க்கமுடியாத சூழ்நிலையிலேயே தலிபான்களுடன் வோக்கர் சேரநேர்ந்ததாக அவர்கள் வாதிடுகின்றனர்.

வோக்கர் வழங்கிய ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே அவர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

## இன்றும் நாளையும்

# மாணவருக்கான சீருடைத் துணிகள் வலயங்களுக்கு விநியோகம்

யாழ்ப்பாணம்,பெப்.7

யாழ்மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடைத் துணிகள் இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் வலயங்களுக்கு விநியோகம் செய்யப்படவுள்ளன.

"பீறைறு ஓவ் சவுத்" கப்பலில் அண்மையில் எடுத்துவரப்பட்ட இவற்றை இறக்கும் பணிகள் தற்போது முடிவடைந்தமையால் அவை உடனடியாக வலயங்கள்மூலம் பாடசாலைகளுக்கு விநியோகப்படவுள்ளன.

மாவட்டத்தின் பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான சீருடைத் துணிகள் யாவும் முழுமையாக எடுத்துவரப்பட்டுள்ளமையால் விநியோகத்தில் எதுவித தடங்கலும் ஏற்படாது என்று யாழ்மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன்படி இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வடமராட்சி மற்றும் தென்மராட்சி கல்வி வலயங்களுக்கும் -

நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வலிகாமம், தீவகம் மற்றும் யாழ்ப்பாணம் கல்வி வலயங்களுக்கும் சீருடைத் துணிகள் வழங்கப்படும்.

வலயக் கல்விப் பணிப்பாளர்கள் தமது வலயத்துக்குரிய சீருடைத் துணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஆளணியையும் வாகனங்களையும் யாழ். மத்திய கல்லூரிக்கு அனுப்பிவைக்குமாறு அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

### பாடநூல்கள்

இதேவேளை -

இலவச பாடநூல்களும் கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளபோதும் அவற்றை இறக்கும் பணிகள் இன்னும் பூர்த்தியடையவில்லை. ஆயினும் இறக்கிமுடிக்கப்பட்ட பாட நூல்கள் எதிர்வரும் சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களும் வலயங்களுக்கு வழங்கப்படவுள்ளன.

மாவட்டத்தின் பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான பாடநூல்களில் 95 வீதமான நூல்கள் எடுத்துவரப்பட்டுள்ளதாகவும் இவற்றின் விநியோகத்தைக் கண்காணிக்க கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தைச் சேர்ந்த இரு அதிகாரிகள் இங்கு வருகை தந்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(க-10)

## வாராந்த நிகழ்வு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வில் 'அடியார் தம் வினைதீர்க்கும் வேல்' என்னும் பொருளில் சைவப்புலவர் சி.கா.கமலநாதன் உரை வழங்கவுள்ளார். இந் நிகழ்வுக்குரிய அறிமுகவுரையை சிவஸ்ரீ ஐயாத்துரைக் குருக்கள் நிகழ்த்துவார். (க-8)

## குடாநாட்டில் நடைமுறைப்படுத்தப்படும்

# பகல்நேர மின்வெட்டுக் காரணமாக அலுவலகப் பணிகள் பாதிப்பு!

யாழ்ப்பாணம்,பெப்.7

தற்பொழுது குடாநாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பகல்நேர மின்வெட்டினால் அரச அலுவலகங்கள் மற்றும் திணைக்களங்களின் செயற்பாடுகள் மிகவும் பாதிப்படைந்துள்ளன.

இதனால் அலுவலகங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் தமது பணிகளைச் செய்வதில் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இதேவேளை -

இந்த மின்வெட்டின் காரணமாக தமது தேர்தல் பணிகளை மேற்கொள்வது பெருஞ்சிரமமாக உள்ளதாக தேர்தல் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (க-10)


அளவெட்டி வடக்கு

## தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோயில் பொதுச்சபைக் கூட்டம் 2002

மேற்படி பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் (10.02.2002) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30மணிக்கு நடைபெறவுள்ளது. இக்கூட்டத்துக்கு உபயகாரர்கள், அங்கத்தவர்கள் தவறாது சமுகம்தரவும். புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறும்.

(393) - ஆலய பரிபாலனசபை





கணபதி துணை

### தெல்லிப்பளை – பாலர் ஞானோதய சபையின் 55ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெறும்

## சைவப் பெருவிழா

காலம்: 09.02.2002 சனி, 10.02.2002 ஞாயிறு.

இடம்: காசி விநாயகர் தேவஸ்தானம் ஸ்ரீ சிவகடாக்ஷக்குருக்கள் இசையரங்கு,

தலைமை: சைவப்புலவர் வ.செல்லத்துரை அவர்கள் (முன்னாள் அதிபர், மெய்கண்டான் மகா வித்தியாலயம்)

09.02.2002 சனிக்கிழமை விழா நிகழ்வுகள்

காலை 9 மணிக்கு காசி விநாயகருக்கு விசேட ஆராதனை

காலை 9.15 மணிக்கு மாணவர் கூட்டுப்பிரார்த்தனை

காலை 9.30 மணிக்கு சமய குரவர்கள் விழா மண்டபத்துக்கு எழுந்தருளல்.

இந்நிகழ்வுகளைத் தொடர்ந்து,

ஆசியுரை: மகாவித்துவான் ந.வீரமணி ஐயர் அவர்கள்.

அருளாசியுரை: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் - நல்லை ஆதீன முதல்வர் அவர்கள்.

சொற்பொழிவு: "சைவத்தின் தொன்மை" கவிஞர் திரு.சோ.பத்மநாதன் அவர்கள்.

இன்னிசைக் கச்சேரி: செல்வி மாதினி நாகரத்தினம் அவர்கள்.

பரதநாட்டிய நிகழ்ச்சியும் இடம்பெறும்.

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(389) -சபை நிர்வாகத்தினர்.


## கண்ணீர் அஞ்சலி

எனது உடன் பிறவாச்சகோதரன் S. சேயோனின் அன்பு மாமனார்

### கதிர்த்தம்பி தங்கராசா

அவர்கள் 05.02.2002 அன்று காலமானதையிட்டு அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

கரந்தன் றோட், நீர்வேலி தெற்கு, நீர்வேலி. (399)

உடன் பிறவாச்சகோதரன் S. ஜெயந்தன்.

## ஆலயத்தில் திருட்டு

சுன்னாகம்,பெப்.7

சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் ஆலயம் உடைக்கப்பட்டு, பெறுமதி மிக்க பொருள்கள் அபகரிக்கப்பட்டுள்ளன.

இத்துணிகரச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு ஊரடங்குச்சட்ட வேளையில் இடம்பெற்றது.

ஆலயத்தின் கதவுகளை உடைத்து அர்த்த மண்டபத்துக்குள் நுழைந்த திருடர்கள், கர்ப்பக்கிரகத்தை உடைத்துத் திறந்து சிவபூதராயர் விக்கிரகத்தை உடைத்துத் திறந்து சிவபூதராயர் விக்கிரகத்தைப் பெயர்த்துள்ளனர். அத்துடன் அங்கி, முடி உட்பட பெறுமதியான பொருள்களையும் அபகரித்துள்ளனர்.

உள்ளேயிருந்த திறப்புகளைப் பயன்படுத்தி வசந்த மண்டபத்தைத் திறந்து அங்கிருந்த ஒலிபெருக்கிச் சாதனங்களில் சிலவற்றையும் திருடர்கள் எடுத்துச்சென்றுள்ளனர்.

கடந்த ஒரு வருடத்துக்கு முன்னரும் இவ்வாலயம் உடைக்கப்பட்டு திருட்டுப்போனமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சந்தனை வைரவர் ஆலயமும் இதே இரவு உடைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் பொருள்கள் ஏதும் திருட்டுப்போகவில்லை. (க-27)

## கண்காட்சி

யாழ்ப்பாணம்,பெப்.7

யாழ்கல்வி வலயத்தின் ஆரம்பப் பிரிவு கற்றல், கற்பித்தல் சாதனப் போட்டியும் கண்காட்சியும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையில் இடம்பெறவுள்ளன.

கோட்ட மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகள் யாவும் தமது ஆக்கங்களை அன்றையதினம் காலை 8.30 மணிக்குமுன் காட்சிப்படுத்துமாறு யாழ்.கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் த.இராஜலிங்கம் அறிவித்துள்ளார். (க-10)

## வீதியில் சடலமாக மீட்கப்பட்டவர் முன்னாள் பாடகர்

யாழ்ப்பாணம்,பெப்.7

யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதியில் அநாதரவான நிலையில் கிடந்து அண்மையில் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட சடலம் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டது.

நல்லூர், செம்மணி வீதியைச் சேர்ந்த கு.வைகுந்தநாதன் (வயது 48) என்ற இந்த நபர் முன்னாள் பொப்பிசைப் பாடகர் என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

மரண விசாரணைகளின் பின்பு சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (க-10)

## நயினையில் குருபூசை

நயினை தவப்பெருந்திரு ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார சுவாமிகளின் 53ஆவது குருபூசைத் தினம் நாளை மறுதினம் சனிக்கிழமை நயினாதீவில் அமைந்துள்ள அவரது சமாதியில் நடைபெறவுள்ளது. அன்று காலை சமாதியின் மேல் சந்நிதியாய் எழுந்தருளியிருக்கும் நடராஜப்பெருமானுக்கும் ஏனைய பரிவாரமூர்த்திகளுக்கும் விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று மதியம் அடியார்கள் அனைவருக்கும் அன்னதானமும் வழங்கப்படும். (க-8)

## பாடசாலையில் 150ஆவது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம்,பெப்.7

வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் 150ஆவது ஆண்டு நிறைவு விழா நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு அதிபர் ந.சிவராஜா தலைமையில் பாடசாலை பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை 9 மணிக்கு பாடசாலை முன்றலில் நிறுவப்பட்டுள்ள நாவலர் பெருமானின் திருவுருவச்சிலையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் திறந்துவைப்பார்.

தொடர்ந்து காலை 10.20 மணியளவில் வித்தியாலய 150ஆவது ஆண்டு நிறைவு விழா மலர் வெளியீடும் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர் ஆண்டு விழா மலரை வெளியிட்டு வைப்பார். முதற்பிரதியை யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் பெற்றுக்கொள்வார்.

பின்னர் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (க-8)


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

## 16ஆம் நாள் நினைவலைகள்



அன்னை மடியில் 15 - 05 - 1917

ஆண்டவன் அடியில் 24 - 01 - 2002

### அமரர் நாகலிங்கம் சோமசுந்தரம் (ஸ்தபதி)

இந்தியாவைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிற்பக் கலாவிருட்சம் நாகலிங்கம் சோமசுந்தரம் ஸ்தபதி சரிந்த 16ஆவது நினைவு நாளில், எமது ஆலயங்களின் ஸ்தபதியாக மிளிர்ந்த அன்னாரது ஆத்மா சாந்தியடைய எங்கள் குல தெய்வங்களைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

பரிபாலன சபையினர்,

கோண்டாவில் மேற்கு, ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானம்.

தாவடி வடக்கு ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானம். (391)



## முக்கிய அறிவித்தல்

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில் பயிற்சிபெற்ற முதலாம் கட்ட அபிவிருத்தித் தொண்டர்களின் பயிற்சி நெறிக்கான சான்றிதழ் வழங்குவதற்கான பரீட்சை எதிர்வரும் (11.02.2002) திங்கட்கிழமை பி.ப.1.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும். அனைத்து பயிற்சியாளர்களும் பரீட்சைக்குத் தவறாது தோற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். மேலதிக விவரங்களுக்கு தென்மராட்சி பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

பிரதேச செயலர், தென்மராட்சி, சாவகச்சேரி.

(C/20630)



# மரண அறிவித்தல்கள்

## கதிர்த்தம்பி தங்கராசா பண்டிதர்

(ஓய்வுபெற்ற அதிபர், அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை)

ஏழாலை மத்தியைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரித்தம்பி தங்கராசா அவர்கள் நேற்றுமுன்தினம் (05.02.2002) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

இவர் காலஞ்சென்ற கதிரித்தம்பி - இளையபிள்ளையின் அன்பு மகனும் பார்பதிப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/அத்தியார் இந்துக் கல்லூரி) பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், செல்வராசா, நேசராசா, பூமலர் மற்றும் நடராசா (சின்னமணி), தங்கமலர், யோகமலர், மல்லிகாமலர் (ஆசிரியர், ஏழாலை சைவ மகாஜன வித்தியாசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற செல்லம்மா, தங்கம்மா, இரத்தினம் மற்றும் நல்லம்மா, வச்சலா, மயில்வாகனம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2002) வியாழக்கிழமை முற்பகல் 11.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-

நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (397)

த.பார்பதிப்பிள்ளை (மனைவி)

ச.சேயோன் (மருமகன்)

## திருமதி வேலுப்பிள்ளை இலட்சுமி

மாசார், பளையைச் சேர்ந்த திருமதி வேலுப்பிள்ளை இலட்சுமி நேற்று (06.02.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2002) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கூழாவடி, ஆனைக்கோட்டையில் (புக்கைதின்னிப் பிள்ளையார் கோயிலுக்குச் சமீபமாக) நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

தற்காலிக முகவரி: கூழாவடி, ஆனைக்கோட்டை. (400)

வே.தங்கராசா (மகன்) மாசார், பளை. மேற்பார்வையாளர், தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்.

## மயில்வாகனம் குமாரவேலு

(மட்டுவில் மகா வித்தியாலயத்தில் காவலாளியாகக் கடமையாற்றி ஓய்வுபெற்றவர்)

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட மயில்வாகனம் குமாரவேலு 05.02.2002 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லமுத்துவின் அன்புக் கணவரும் மோகதாசன், சண்முகதாசன், புவனதாசன் (பிரான்ஸ்), கலாராணி (ஜேர்மனி) ஆகியோரின் தந்தையாரும் லதா, ஜெனிதா, புத்தி (பிரான்ஸ்), ருஸ்ஜேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் லதாகரன், சர்மிளாதாஸ், பாலதாஸ், பகீரதன், பிரசாந், பிரசாத், பிரசான் (பிரான்ஸ்), சுகிர்தன், சுகீபா, சுஜீபா (ஜேர்மனி) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்போதைய முகவரி: தில்லைக்கட்டி ஒழுங்கை, புகையிரத நிலையமருகில், சுன்னாகம். (402)

தகவல்:- பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பேரமக்கள்.

உதயன்

## அடிப்படை ஒன்றுதான்

கடலில் சுதந்திரமாகத் தொழிலில் ஈடுபட படையினர் விதித்திருக்கும் கட்டுப்பாடுகள் மற்றும் தடைகளை அடியோடு அகற்றக் கோரி குடாநாட்டு கடற்றொழிலாளர் சமூகம் ஆரம்பித்த போராட்டம் இன்று எட்டாவது நாளாகத் தொடர்கின்றது.

அரசு தரும் நிவாரணங்கள், சலுகைகள், வாக்குறுதிகள் என்பவற்றை ஏற்க மறுத்து - அவற்றைத் தூக்கி வீசிவிட்டு - யாழ்.அரச செயலகத்தை முற்றாக முடங்கச் செய்யும் வகையில் அவர்கள் தங்களது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

தங்கள் தொழில் செய்யும் உரிமையை ஆட்சியாளர்கள் தரும் எந்தச் சலுகைக்காகவும் விட்டுக்கொடுக்காமல் - தமக்கு நிரந்தரத் தீர்வு வேண்டும் என்ற திடசங்கற்பத்துடன் - அலுக்காமல், சளைக்காமல் - மீனவர்கள் புரியும் இந்த மறியற்போர் முழு நாட்டினதும் கவனத்தை மட்டுமன்றி சர்வதேச சமூகத்தின் பார்வையையும் அதன்பால் ஈர்க்கத் தொடங்கியிருக்கின்றது.

நாட்டின் சுதந்திர தினத்தன்று யாழ்ப்பாணத்தில் அரச செயலகத்தில் நடைபெறவிருந்த சுதந்திரதின நிகழ்வைத் தடுத்துநிறுத்தி - தேசியக் கொடி பறக்க வேண்டிய கம்பத்தில் கறுப்புக் கொடியை ஏற்றியதன்மூலம் -

இலங்கையில் சமாதானம் குறித்துப் பெரிய அளவில் பேசப்பட்டு வந்தாலும் தமிழ் மக்களின் வாழ்வுநிலையில் எந்த வித மாற்றமோ விமோசனமோ இன்னும் ஏற்பட்டுவிடவில்லை என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டிய மீனவர்களின் போராட்டம் வரவேற்கப்படவேண்டியது. குடாநாட்டு மக்கள் அனைவருமே அவர்களின் நியாயபூர்வமான போராட்டத்துக்குத் தாங்கள் முழு ஆதரவை வழங்கக் கடமைப்பட்டுள்ளார்கள். அந்த வகையில் இன்று நடக்கும் கதவடைப்புப் போராட்டம் மீனவர்களை உற்சாகமூட்டும் என்று நம்பலாம்.

யாழ்.மீனவர்களின் போராட்டத்தின் தாற்பரியம் இப்படியிருக்க -

இந்தப் போராட்டத்தைக் கைவிடுமாறு கேட்டு அமைச்சர்கள் இருவர் மீனவர் சமூகத்துக்கு வேண்டுகோள்களை விடுத்திருக்கின்றனர். அவர்களில் ஒருவர் புதிய அரசின் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர். அடுத்தவர் ஆளுங் கட்சிக்காக யாழ்ப்பாணத்தில் போட்டியிட்டு யாழ்.மக்களால் அவர்களது பிரதிநிதியாக நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதன் மூலம் அமைச்சர் பதவி பெற்றவர்.

மீனவர்களின் தற்போதைய போராட்டம் தேவையற்றது, அவசரப்பட்டு மேற்கொள்ளப்படுவது, சமாதானப் பேச்சுக்கான நல்லெண்ண சூழ்நிலையை பாதித்துவிடும் என்ற அர்த்தப்பட இவர்கள் இருவரும் கருத்து வெளியிட்டிருக்கின்றனர். அத்துடன் மீனவரின் பிரச்சினைகளுக்கு விரைவில் விடிவு கிட்டும் - விடிவு வரும் - என்று வாக்குறுதிகளையும் வழங்கியிருக்கின்றனர்.

குடாநாட்டு மீனவர் சமூகத்தின் பிரச்சினைகள் இன்று நேற்று ஏற்பட்டவையல்ல. இரு தசாப்தத்துக்கும் கூடிய காலப் பகுதியில் போரின் கொடூரங்களால் மிகப் பெரிய அளவில் உடனடிப் பாதிப்புக்கு உள்ளானவர்கள் மீனவர்களே.

கடந்த பல ஆண்டுகளாக மீனவர் சமூகத்தால் விடுக்கப்பட்ட வேண்டுகோள்கள், மன்றாட்டமான கோரிக்கைகள், ஆட்சியாளர்களின் காலடிக்கு அனுப்பப்பட்ட மகஜர்கள் எல்லாமே அலட்சியம் செய்யப்பட்டதன் விளைவுதான் இன்றைய போராட்டம். விரக்தியின் விளிம்பிற்கு வந்த பிறகே மீனவர்கள் வீதியில் இறங்கியிருக்கிறார்கள்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நிரந்தரப் போர்நிறுத்தத்தை உள்ளடக்கிய புரிந்துணர்வு உடன்படிக்கை தாமதமடைவதற்குத் தடையாக உள்ள ஒரு விவகாரமே இந்த மீன்பிடித்தடை.

தற்போது அரசு தரையில் அமுல் செய்துவரும் மோதல் தவிர்ப்பை நிரந்தர யுத்தநிறுத்தம் என்று வரும்போது கடல் மார்க்கத்திலும் அதனை விஸ்தரித்துக் கட்டுப்பாடற்ற கடற்போக்குவரத்துக்கு அனுமதியளிக்கவேண்டும்.

இந்த விடயத்தில் இணக்கம் தெரிவிக்க அரசு பின்னடித்து வருவது நிரந்தர யுத்த நிறுத்தம் உருவாகுவதைத் தாமதப்படுத்துவதாகப் புலிகள் தரப்பில் சுட்டிக் காட்டப்பட்டிருப்பது தெரிந்ததே.

நிரந்தர யுத்தநிறுத்தம் எட்டப்பட்டு அதன்மூலம் கடற்போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் நீங்கும்போது தற்போது மீனவர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள், துன்ப துயரங்கள் அப்படியே நீங்கிவிட வாய்ப்புண்டு.

ஆனால் இதனை அரசு விரைந்து நடைமுறைப்படுத்துமா என்ற சந்தேகம் - அவநம்பிக்கை - புலிகளிடம் இருப்பது போலவே தமிழ் மக்களிடமும் இருக்கின்றது.

பிரதமர் ரணில் தலைமையிலான புதிய அரசு தமிழர் பிரச்சினையை இதய சுத்தியுடன் அணுகி சமாதான வழிமூலம் தீர்த்து வைக்கும் என்ற நம்பிக்கை தமிழ் மக்களிடம் இருந்தாலும் -

அந்த நம்பிக்கை அவநம்பிக்கையாக மாறுவதற்கு அரசு இடமளிக்கக் கூடாது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட அவநம்பிக்கைகளின் வெளிப்பாடுதான் குடாநாட்டு மக்கள் இன்று அடிக்கடி மேற்கொள்ளும் போராட்டங்களுக்கு அடிப்படை. எனவே நிரந்தர யுத்தநிறுத்தம் ஏற்பட்டு அதன்மூலம் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் அகன்றுபோக அரசு விரைந்து வழிகாண வேண்டும். இதைவிடுத்துப் போராடும் மக்களிடம் போராட்டத்தை நிறுத்துமாறு கேட்பதும், தேர்தலுக்கு முன்பு வழங்கியது போன்று தற்போதும் வாக்குறுதிகளை வெறும் வார்த்தைகளாக வழங்கி மக்களைச் சமாளிக்க முயலவதும் நல்லெண்ணத்தை உருவாக்க உதவாது என்பதை கௌரவ அமைச்சர்கள் புரிந்து கொள்ளட்டும்.



அண்மையில் தமிழகத்திலிருந்து வருகைதந்த நாதஸ்வர, தவில் கலைஞர்கள் மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தில் நடத்திய இசைவிருந்தின்போது எடுக்கப்பட்ட படம். (ஐ)

## வீதிப் பவனியாக அழைத்துவரப்பட்ட திருடன்!

உடுவில், கந்தரோடை, சங்குவேலி பகுதிகளில் அண்மைக் காலத்தில் இடம்பெற்ற திருட்டுக்களின் சூத்திரதாரி எனக் கருதப்படும். இளைஞர் ஒருவர் சங்குவேலிப் பகுதிப் பொது மக்களால் பிடிக்கப்பட்டு சுன்னாகம் பொலீஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சங்குவேலியில் உள்ள கோயிலில் திருடிவிட்டு கூரை வழியாக வெளியேறிய சமயம் அப்பகுதி பொதுமக்கள் சிலரால் மேற்படி இளைஞர் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

பிடிபட்ட திருடனின் கழுத்தில் 'நான்தான் கோயில் திருடன்' என்று எழுதிய மட்டையை மாட்டி, லான்ட் மாஸ்டரில் ஏற்றி கிராம வீதிகளூடாக அழைத்துச் சென்று சுன்னாகம் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர். (ம-152)

## நாட்டு நடப்பு

### தென்மராட்சி - அன்றும் இன்றும்

இன்று III

மாதவக் கொழுந்து கற்பால்
மதுரையை எரித்தாள் அன்று
தீதற நீதியோச்ச சோழன்
தேரேற்றி மகனைக் கொன்றான்
பாதகம் என்ன செய்தார்
பண்புசேர் தென்மராட்சி மக்கள்?
ஓதரும் தமிழ் பண்பாட்டிற்கு
ஒப்பரும் உவமை சொன்ன
மாதவம் செய்த மண்ணை
மாய்த்தது பல்குழலே அன்றோ!
சாதனை புரிந்த பேரூர்
சவக்காடாய்ப் போயிற்று அம்மா.

*- விகடகவி.*

## நோர்வே பிரதிநிதிகளின் அனுசரணையுடனான சமாதான வழிமுறைகளின் பெறுமதியை குறைத்து மதிப்பிடுவதே ஜனாதிபதி சந்திரிகாவின் நோக்கம்

### இப்படிச் சாடுகிறார் அன்ரன் பாலசிங்கம்

கொழும்பு,பெப்.7

நோர்வே நாட்டு பிரதிநிதிகளின் அனுசரணையுடன் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான வழிமுறைகளின் பெறுமதியைக் குறைத்து மதிப்பிடுவதே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நோக்கமாகும்.

- இவ்வாறு விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நேற்றுமுன்தினம் லண்டனில் இருந்து விடுத்துள்ள விசேட அறிக்கையில் சாடியிருக்கிறார்.

இலங்கை வானொலிச் செய்தி அறிக்கையில் அன்ரன் பாலசிங்கத்தின் லண்டன் அறிக்கை குறித்து விவரமாக விவரிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் தமது படைக்குச் சிறுவர்களைச் சேர்த்துக்கொள்வதன் மூலம் அவர்களின் இராணுவப் பலத்தை அதிகரித்து வருகின்றனர் என்றவாறாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்த குற்றச்சாட்டுகளில் எவ்வித உண்மையும் இல்லை என்றும் -

அன்ரன் பாலசிங்கத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

ஜனாதிபதி சந்திரிகா கடந்த ஓரிரு தினங்களுக்கு முன்னர் விடுத்த அறிக்கை ஒன்றில் 'மோதல்தவிர்ப்பு' இடம்பெற்றுவரும் இந்தவேளையிலும் புலிகள் சிறுவர்களைத் தங்களது படையில் சேர்த்துக்கொள்கிறார்கள் என்று குற்றஞ்சாட்டியிருந்தார். இது தொடர்பாகவே பாலசிங்கம் பதிலளித்திருந்தார் என்றும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டது.

நோர்வே பிரதிநிதிகளின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் சமாதான வழிமுறைகளின் பெறுமதியைக் குறைத்து மதிப்பிடுவதே ஜனாதிபதியின் நோக்கமாகும். தமிழ் மக்களின் உரிமைகளை நிலைநாட்ட தீவிரகவனம் செலுத்தப்படும். அதே வேளையில் புதிய அரசு மேற்கொண்டுவரும் சமாதான நடவடிக்கைகளுக்கும் ஆக்கபூர்வமான பதில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்தகைய மிகமுக்கியமான விடயத்தில் சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் வெளிப்படையாகவும், பொறுப்புள்ள வகையிலும், கௌரவமாகவும் நடந்து கொள்ளவேண்டும்.

#### சமாதான முயற்சியை முறியடிக்கும் செயல்

சமாதானம் தொடர்பாகப் புலிகள் மோசமான வகையில் நடந்துகொள்கின்றார்கள் என்று சில ஊடகங்களும், தென்பகுதி அரசியல்வாதிகளும் தெரிவித்த குற்றச்சாட்டுக்களின் முக்கிய நோக்கம் சமாதான முயற்சிகளை முறியடிப்பதாகும்.

கடந்த ஏழு வருடங்களாக சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக கௌரவமற்ற முறையில் நடந்து கொண்ட ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான பொ.ஐ.முவிடம் இருந்து வேறு எத்தகைய அறிக்கையையும் எதிர்பார்க்கமுடியாது.

- இவ்வாறு அன்ரன் பாலசிங்கத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக இலங்கை வானொலி கூறியது. (க-9)

## கடந்த பல வருடங்களின் பின்னர் சுதந்திர தினத்தில் அச்சமின்றி வீதிகளில் நடமாடிய மக்கள்!

கொழும்பு,பெப்.7

பல வருடங்களாக வீடுகளுக்குள் முடங்கியிருந்தபடி சுதந்திரதின நிகழ்வுகளைத் தொலைக்காட்சியிலேயே பார்த்துவந்த தென்னிலங்கை மக்கள் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற 54 ஆவது சுதந்திர தினத்தை வீதிகளில் இறங்கிக் கொண்டாடினர்.

'வாஷிங்டன் டைம்ஸ்' பத்திரிகை 'போர்நிறுத்தம் இலங்கையருக்கு வழங்கிய சுதந்திரம்' என்ற தலைப்புடன் வெளியிட்ட கட்டுரையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது. அந்தக் கட்டுரையில் எழுதப்பட்டிருப்பதாவது:-

தலைநகர் கொழும்பில் தேசியக் கொடி வீடுகளில் ஏற்றப்பட்டன. 'நீண்ட காலத்தின் பின்னர் சுதந்திர தினத்தன்று அச்சமின்றி வீடுகளை விட்டு நாம் வெளியே வரமுடிந்திருப்பது இப்போதுதான்' என்கிறார் கடை உரிமையாளரான சனத் ஆரியதாஸ.

'கடந்த பல வருடங்களாகவே இத்தகைய நாள்களில் ஊரடங்குச் சட்டத்தை நாம் எதிர்கொண்டு வந்தோம்' என்றும் அவர் கூறுகிறார்.

17ஆண்டுகளில் முதல்தடவையாக விடுதலைப் புலிகளின் தாக்குதல் அச்சம் ஏதுமின்றி இலங்கையின் சுதந்திரதினம் கொண்டாடப்பட்டது இந்தவருடம்தான். சிறுபான்மைத் தமிழர்களின் உரிமைகளுக்காகப் போராடிவரும் விடுதலைப் புலிகள் மேற்கொண்டுள்ள யுத்த நிறுத்தம் பெப்ரவரி 24 ஆம் திகதி வரையும் நடைமுறையில் உள்ளது.

விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்தம், சுதந்திரதின கொண்டாட்டத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகளை மிக இலகுவாக்கியுள்ளது. தற்கொலைத் தாக்குதல் அச்சுறுத்தலால் கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதே வழக்கம்.

1998ஆம் ஆண்டு இலங்கை சுதந்திர தினத்தின் பொன்விழாவை கண்டி தலதா மாளிகையில் கொண்டாட அரசு தீர்மானித்திருந்தது. ஆனால் தலதாமாளிகை மீது புலிகள் தாக்குதல் நடத்தியதை அடுத்து, சுதந்திரதின நிகழ்வுகள் நாடாளுமன்ற முன்றிலுக்கு மாற்றப்பட்டன. அன்றிலிருந்து அதே இடத்திலேயே இடம்பெற்றுவந்த சுதந்திரதின நிகழ்வுகள் இந்த ஆண்டில்தான் சுதந்திர சதுக்கத்துக்கு மாற்றப்பட்டுள்ளன.

நீண்ட காலமாகத் தொடர்ந்த இழப்புக்கள், துன்பங்கள் என்பன சாதாரண வாழ்க்கையைத் தேடுவதற்கான ஒரு சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளன என்கிறார் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்.

இந்த அமைதி அந்த அழகிய தீவில் தொடருமா? என்பதே தற்போதைய பிரதான கேள்வி - என்று அதில் உள்ளது. (ஒ)

### நாளை

தை 26
வெள்ளிக்கிழமை
(08-02-2002)
திதி : ஏகாதசி
முற்பகல் 9.54 வரை.
நட்சத்திரம் : மூலம்
முன்னிரவு 8.58 வரை.
ஏகாதசி விரதம்
சுபநேரம் : 6.35 - 8.05
ராகுகாலம் : 11.05 - 12.35
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

எங்கெல்லாம் கட்டுப்பாடு அதிகமாகிறதோ, அங்கெல்லாம் கள்ளத்தனம் தானாகவே உருவாகிவிடுகிறது.

## சாயி சிந்தனை



### கர்வம் நிறைந்தவனை யார்தான் விரும்பி நேசிப்பார்கள்?

மனிதனிடம் கர்வம் நிறைந்திருக்கும்வரை யாரையும் அவனால் உண்மையாக நேசிக்கமுடியாது! கர்வமற்ற மனிதனைத்தான் அனைவரும் விரும்புவார்கள்.

கோபம் உள்ள மனிதனுக்கு சுகம் என்பதே இருக்காது. அவாகள் தொடர்ந்து நிரந்தரமான சோகத்தில் மூழ்கி இருப்பார்கள்.

கோபத்தைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பவன் என்றும் ஆனந்தமாக இருப்பான். மிதமீறிய ஆசைகள் இருந்தால் அவனால் எதையும் அடையமுடியாது. என்று அவனது ஆசைகளுக்கு ஒரு வரம்பு ஏற்படுத்திக்கொள்கிறானோ அன்றிலிருந்தே அவனை அனைவரும் விரும்புவர்!

பேராசையோ அன்றி கஞ்சத்தனமோ மனிதனிடம் அதிகரிக்கும் போது, அவன் மகிழ்ச்சியாகவே இருக்கமாட்டான். அவற்றை விலக்கும்போதுதான் மகிழ்ச்சி உருவாகிறது.

ருசிகள் மாறுபடுகின்றன. உனக்குப் பிடித்தது மற்றவனுக்குப் பிடிக்காமல் இருக்கிறது. ஒருவனுக்கு நன்மையாக இருப்பது மற்றவனுக்குக் கெடுதலாக இருக்கிறது.

இத்தகைய மனித வாழ்க்கையில் தெய்வத்தைப்பற்றி உணர்ந்து கொள்வது என்பது எப்படிச் சாத்தியமாகும். ஆகவே நல்ல சிந்தனைகளை வளர்த்துக்கொள்ளுங்கள்.

# பாராட்டி வாழ்த்துகிறோம்

**திரு. கோணையா தியாகராசா**

*(இளைப்பாறிய தபாலதிபரும், சமூக சேவையாளரும்)*

**யாழ். சமூக அபிவிருத்தி மன்றத்தில் தன்னலமற்ற சேவை புரிந்த முன்னாள் தலைவர் இன்று சமாதான நீதிவானாகப் பதவியேற்கிறார். இவரது பணி தொடர இறையருள் வேண்டுகிறோம்.**

சமூக அபிவிருத்தி மன்றம்
*257/2, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.* மன்ற உறுப்பினர். (235)



# ஈரவிழிகளில் 11ஆம் ஆண்டின் நீங்காத நினைவலைகள்

தோற்றம் 22 - 06 - 1946



அநியாய அழிப்பு 10 - 02 - 1991

## அமரர் இரத்தினம் வேலாயுதபிள்ளை

*செல்லர் (தாவடி)*

பாசத்தின் ஒளிவிளக்காய்
பண்பின் இருப்பிடமாய்
எங்களுக்கு எல்லாம் அறிவினை ஊட்டி
அன்பைப் பொழிந்த எம் தந்தையே!
இடைவழியில் சொல்லாது விடைபெற்று வீட்டு
எங்கே அப்பா சென்றீர்கள்?
உங்களை விட்டுப்பிரிந்து பதினொரு ஆண்டுகள் என்ன
நூறு ஆண்டுகள் சென்றாலும் ஆறாது எம் சோகம்
அகலாது உங்கள் நினைவுகள்!

*உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல விநாயகரை வேண்டுகிறோம்.*

முகவரி: *என்றும் உங்கள் நினைவில் வாழும்:*
திருமதி இ.வேலாயுதபிள்ளை, - குடும்பத்தினர்.
*முதலியார் கோயில் லேன்,*
*கொக்குவில் மேற்கு, கொக்குவில்.* (283)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஒலிவர் இமாகுலேற்

திருமதி ஒலிவர் இமாகுலேற் நேற்று (06.02.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் றோமான் ஒலிவர் (யாழ்.மாநகரசபை) அவர்களின் அன்பு மனைவியும் பிராட்லி, ரெறன்ஸ், கலிஸ்ரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற மனவல் - விக்ரோறியா தம்பதிகளின் ஏக புத்திரியும் காலஞ்சென்ற குயின்ரன் மற்றும் அலன்றோஸ் (ஜேர்மனி), கொன்ஸ்ரன்ரைன் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான றோமான் - யோசேப்பின் தம்பதியினரின் மருமகளும் யூடா இமாகுலேற், கிறிஸ்ரியன், அன்ரன், இராயப்பு லூர்துநாயகி, ஆனந்தன், காலஞ்சென்ற அன்ரனி (இதயன்) மற்றும் பீலிக்ஸ் ஜெயசீலி (பிரான்ஸ்), ஸ்ரனிஸ் லோஸ் (நோர்வே), டயஸ் (பிரான்ஸ்), அலன்றோஸ் விஜயகுமாரி, குயின்ரன் றெஜினா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து இன்று (07.02.2002) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு (புதிய நேரம்) யாழ்.கொழும்புத்துறை... யாழ்.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*3, சின்னக்கடை வீதி,* றோமான் ஒலிவர்
*குருநகர், யாழ்ப்பாணம்.* (379) (கூரி - கணவர்)

## கணபதிப்பிள்ளை மார்க்கண்டு

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் தொல்புரத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை மார்க்கண்டு 02.02.2002 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2002) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*பத்தானைக்கேணி,*
*தொல்புரம், சுழிபுரம்.* (374) மா.இரஞ்சிதநாதன் (மகன்)

## திருமதி இரத்தினமணி சுப்பிரமணியம்

சுன்னாகத்தைச் சேர்ந்த திருமதி இரத்தினமணி சுப்பிரமணியம் 05.02.2002 செவ்வாய்க்கிழமை கொழும்பில் இறைபதம் எய்தினார்.

அன்னார் டாக்டர் கனகசுந்தரம் சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் டாக்டர் லலிதா (பல்வைத்திய சிகிச்சை நிலையம், கொழும்பு), டாக்டர் ரவிராஜ் (சத்திரசிகிச்சை நிபுணர், கொழும்பு, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் டாக்டர் யோகவிநாயகன் (சுகாதாரக் கல்விப் பணியகம், கொழும்பு), திருமதி அனுசூயா ரவிராஜ் ஆகியோரின் அன்பு மாமியும் யோகினி, சுகப்பிரியன், பிரதாகினி ஆகியோரின் பேர்த்தியும் அமரர் டாக்டர் பொன்.இரத்தினம், அமரர் பொன்.நாகரத்தினம் ஆகியோரின் சகோதரியும் திருமதி இயம்பவதி, திருமதி நாகவள்ளி நாயகி, க.கணேசரத்தினம், திருமதி அசரஸ்வதி, க.கெங்காதரன், அமரர் த.மயில்வாகனம், அமரர் ம.சின்னத்தங்கம், செ.முத்துக்குமார சுவாமி, திருமதி மு.தெய்வநாயகி ஆகியோரின் மைத்துனியும் இ.விநோதன், டாக்டர் இ.அஜந்தன், நா.சுதர்சன், நா.சுகந்தன், நா.சுகிர்தன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக பொறளை ஜயரத்ன மலர்ச்சாலையில் இன்று (07.02.2002) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு வைக்கப்பட்டு, 12.00 மணிக்கு கிரியைகள் ஆரம்பித்து பிற்பகல் 2.00 மணிக்கு பொறளை கனத்தை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*8/3/1, 55ஆவது ஒழுங்கை,* டாக்டர் க.சுப்பிரமணியம்
*கொழும்பு 06.*
*தொலைபேசி: 592363, 586878.* (C-20321)

## தாலியை அபகரிக்க முயன்ற இளைஞர் பிடிபட்டார்

தென்மராட்சி,பெப்.7

பருத்தித்துறை மாதனைப் பகுதி வீடொன்றில் இரவுச் சமயலில் ஈடுபட்டிருந்த பெண்ணின் தாலிக்கொடியை அபகரித்துக்கொண்டு ஓடமுயன்ற இளைஞர் வீட்டில் உள்ளவர்களால் மடக்கிப்பிடிக்கப்பட்ட சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றது. இளைஞரை மடக்கிப் பிடித்த சமயம் இடம்பெற்ற இழுபறியில் இருவர் காயமடைந்துள்ளனர்.

பருத்தித்துறை பன்னங்கட்டையைச் சேர்ந்த அசோக்குமார் என்ற அந்த இளைஞரைப் பொலீஸார் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்த போது எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-117)

## படகில் இருந்து கடலுக்குள் பாய்ந்த பெண்

யாழ்பாணம்,பெப்.7

நயினாதீவில் இருந்து ஊர்காவற்றுறைக்குப் படகில் பயணஞ்செய்த பெண்மணி ஒருவர் திடீரென நடுக் கடலுக்குள் பாய்ந்தார். எனினும் அவரைப் படகோட்டிகள் மீட்டுவிட்டனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் நயினாதீவில் இருந்து ஊர்காவற்றுறைக்குச் சென்றுகொண்டிருந்த படகிலேயே இந்த விபரீதம் நடைபெற்றது. இதனால் ஏனைய பயணிகள் மத்தியில் சிறுதுநேரம் பதற்றம் நிலவியது.

ஆறுகால்மடம், மானிப்பாய் வீதியைச் சேர்ந்த சிறிமுகராசா சுதாமதி (வயது 40) என்ற பெண்ணே கடலுக்குள் பாய்ந்தவராவார்.

படகோட்டிகளால் மீட்கப்பட்ட இவர் சிகிச்சைக்காக நயினாதீவு ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இவர் திடீரெனக் கடலுக்குள் பாய்ந்ததற்கான காரணம் தெரியவில்லை. (ஐ-6)

## மாதகலில் வெங்காயச்செய்கை பெரும் பாதிப்பு

சண்டிலிப்பாய், பெப்.7

மாதகல் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வெங்காயச்செய்கை கடந்த வாரம் பெய்த கடும் மழையினால் முற்றாக அழிந்து போயுள்ளது. இங்குள்ள நெற்காணிகளில் வெள்ளம் தேங்கி நிற்பதால் நெல் அறுவடை செய்யமுடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

பயிரழிவுகளினால் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்கப் படவேண்டும் என்று மாதகல் விவசாயிகள் சம்மேளனம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கடிதமூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ம-135)

## சுழற்சிமுறை கடன் உதவி

சண்டிலிப்பாய்,பெப்.7

தொல்புரம் கிராம அபிவிருத்திச் சங்கம் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நுண்கருத் திட்டத்தின்கீழ் தமக்குக் கிடைத்த நிதியைக் கொண்டு சுழற்சி முறையிலான சுயதொழில் முயற்சிக் கடனை சங்க உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

விவசாயம், கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு ஆகிய சுயதொழில் முயற்சிகளை மேற்கொள்வோருக்கே இக்கடனுதவி வழங்கப்படவிருப்பதாக சங்கத் தலைவர் தெரிவித்தார்.(ம-135)

## கொழும்பு மாநாட்டுக்கு யாழ்.ஆஸ்பத்திரி உத்தியோகத்தர்களும்

யாழ்ப்பாணம்,பெப்.7

சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் கொழும்பில் அமைச்சர் அலுவலகத்தில் நடைபெறவுள்ள மாநாட்டில் பங்குகொள்ள யாழ்.போதனா வைத்தியசாலை உத்தியோகத்தர் சிலரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்த மாநாட்டுக்கு யாழ்.போதனா வைத்தியசாலையின் சகல உத்தியோகத்தர்களின் சார்பிலும் 10 பிரதிநிதிகள் செல்கின்றனர். (சு-15)

## சாயிபாபா கல்வி நிலையம் திறந்துவைப்பு

சத்திய சாயிபாபா மனிதவள மேம்பாட்டு கல்வி நிலையம் கோப்பாய் சத்திய சாயி சேவா நிலையத்திற்கு அருகில் உள்ள கட்டடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. வெகுவிரைவில் இந்நிலையத்தில் பயிற்சி வகுப்புகள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-72)


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

## இராமநாதன் நுண்கலைக்கழகம்

**நுண்கலைமாணி [இசை/நடனம்/பண்ணிசை/சித்திரமும் வடிவமைப்பும்] கற்கை நெறிகளுக்கான**

**பல்கலைக்கழக அனுமதி 2002 - 2003**

மேற்படி பட்டப்படிப்பிற்கான கற்கைநெறிகளுக்கு அனுமதி பெற விரும்பும் தகுதியுடையவர்களிடமிருந்து **06.03.2002** திகதிவரை விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**கற்கைநெறிக்காலம் - நான்கு வருடங்கள்.**

*அனுமதிக்கான பொது நிபந்தனைகள்:*

1. நுண்கலைமாணி - இசை (கர்நாடக சங்கீதம்)

2001ஆம் ஆண்டு ஓகஸ்ட் க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் பழைய/புதிய பாடத்திட்டங்களின்கீழ் பரீட்சை எடுத்து மானிய ஆணைக்குழு நிபந்தனைகளுக்கு ஏற்ப பல்கலைக்கழகத்திற்கு அனுமதிபெறத் தகுதி பெற்றுள்ளதோடு, சித்திபெற்ற பாடங்களில் சங்கீதத்தையும் ஒருபாடமாகக் கொண்டுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

2. நுண்கலைமாணி - நடனம்

2001ஆம் ஆண்டு ஓகஸ்ட் க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் பழைய/புதிய பாடத்திட்டங்களின்கீழ் பரீட்சை எடுத்து மானிய ஆணைக்குழு நிபந்தனைக்கேற்ப பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறத் தகுதி பெற்றுள்ளதோடு, சித்திபெற்ற பாடங்களில் பரத நாட்டியத்தையும் ஒரு பாடமாகக் கொண்டுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

3. நுண்கலைமாணி - பண்ணிசை

2001ஆம் ஆண்டு ஓகஸ்ட் க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் பழைய/புதிய பாடத்திட்டங்களின்கீழ் பரீட்சை எடுத்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நிபந்தனைக்கேற்ப பல்கலைக்கழகத்திற்கு அனுமதிபெறத் தகுதி பெற்றுள்ளதோடு, சித்திபெற்ற பாடங்களுள் சங்கீதம்/தமிழ்/இந்துநாகரிகம்/இந்துசமயம் ஆகியவற்றில் *ஏதாவது ஒன்றில்* சிறப்புச்சித்தி பெற்றுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

*முக்கிய குறிப்பு:*

மேற்குறிப்பிட்ட கற்கைநெறிகளுக்குரிய அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் ஆற்றுகைப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

4. நுண்கலைமாணி - சித்திரமும் வடிவமைப்பும்

2001ஆம் ஆண்டு ஓகஸ்ட் க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் பழைய/புதிய பாடத்திட்டங்களின்கீழ் பரீட்சை எடுத்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நிபந்தனைக்கேற்ப பல்கலைக்கழகத்திற்கு அனுமதிபெறத் தகுதி பெற்றுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

மேற்குறித்த கற்கைநெறிக்குரிய அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் தகுதிகாண் பரீட்சைக்குத் (Aptitude Test) தோற்றுதல் வேண்டும். முதல்நிலையில் தெரிவு செய்யப்பட்டவர்கள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

*முக்கிய குறிப்பு:*

1. அனைத்துக் கற்கைநெறிகளுக்குரிய விண்ணப்பதாரிகளும் க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேற்றுப் பத்திரத்தின் 'Z' Score - போட்டோ பிரதியொன்றை விண்ணப்பத்துடன் தவறாது இணைக்க வேண்டும். விண்ணப்பத்துடன் க.பொ.த. உயர்தரப் பெறுபேற்றுப் பத்திரத்தினதும், மொத்தப் புள்ளிகளினதும் போட்டோப் பிரதிகளை எல்லா விண்ணப்பதாரிகளும் இணைக்கவேண்டும்.

க.பொ.த. உயர்தரத்தில் மூன்று பாடங்களில் மட்டும் சித்தி பெற்றோர் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றமையை நிரூபிக்கும் ஆவணத்தின் போட்டோப் பிரதியும் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

2. விண்ணப்பதாரிகள் தமது விருப்பத்துக்குரிய கற்கைநெறிகளுக்கு முன்னுரிமையின்படி விண்ணப்பிக்கும்படி அறிவுறுத்தப்படுகின்றனர்.

3. மேற்குறித்த கல்வித் தகைமைகளுக்கு அமையாத, பூரணப்படுத்தப்படாத, குறிப்பிட்ட ஆவணத்தின் போட்டோப்பிரதி இணைக்கப்படாத, தெளிவில்லாத, விண்ணப்ப முடிவு திகதிக்கு கிடைக்கப்பெறாத விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்களை யாழ்.பல்கலைக்கழக சிறாப்பர் கருமபீடத்திலோ, யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையிலோ ரூபா 150/- செலுத்திய பற்றுச்சீட்டை பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில் சமர்ப்பிப்பதன்மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

4. தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்.பல்கலைக்கழகம் என்னும் பெயருக்கு ரூபா 150/-வைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட காசுக் கட்டளையுடன், முத்திரை ஒட்டப்பட்ட சுயவிலாசம் இடப்பட்ட 20X10 செ.மீ. அளவுள்ள கடித உறையை கொழும்பு ஸ்ரோன்ஸ் அலுவலகம், சென்ரல் றோட், கொழும்பு 12. தொலைபேசி இல. 435620 என்னும் முகவரிக்கு அல்லது உதவிப் பதிவாளர், பரீட்சைகளும் அனுமதிகளும் கிளை, யாழ்.பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் அல்லது உதவிப் பதிவாளர், வவுனியா வளாகம், வவுனியா என்னும் முகவரிக்கு அனுப்புவதன்மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

5. விண்ணப்பங்கள் 23X10 செ.மீ. அளவு கொண்ட கடித உறையில் இடதுபக்க மூலையில் நுண்கலைமாணி (இசை/நடனம்/பண்ணிசை/சித்திரமும் வடிவமைப்பும்) கற்கைநெறிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால்மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சை/தகுதிகாண் பரீட்சை/ஆற்றுகை பரீட்சை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் இடம்பெறும்.

விண்ணப்பம் அனுப்ப/ஒப்படைக்க வேண்டிய முகவரி:-

உதவிப்பதிவாளர்/கலைப்பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்,
- பதிவாளர். யாழ்ப்பாணம்.

(C-20616)




யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுக் கழகத்தினால் அண்மையில் 'காலசுரபி' இதழ் - 3 வெளியீட்டு விழா நடைபெற்றது. இவ்விழாவில் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றுகிறார். அருகில் பேராசிரியர் ச.சத்தியசீலன், பேராசிரியர் சபா.ஜெயராசா, வி.பிரபாலினி, பேராசிரியர் க.சிற்றம்பலம், கலைப்பீடாதிபதி ப.கோபாலகிருஷ்ண ஐயர், கு.சுதாகரன், ப.வசந்தி ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (க-ரி)

## பொலீஸ் மா அதிபர் நியமன விவகாரம்:

# அரசுத் தரப்பு ஆட்சேபனை நீதிமன்றத்தால் நிராகரிப்பு

கொழும்பு,பெப்.7

பொலீஸ் மா அதிபரின் பதவிக் காலம் முடிந்த பின்னர் அமைச்சரவையைக் கலந்தாலோசிக்காமல் அவரது பதவிக்காலத்தை ஜனாதிபதி நீடித்திருப்பதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனு குறித்து அரச சட்டத்தரணி சமர்ப்பித்த ஆட்சேபத்தை நேற்று முன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்தது. அத்துடன் மனுத் தொடர்பாக பொலீஸ் மா அதிபருக்கு 'நோட்டீஸ்' அனுப்பவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

லக்கிகொடித்துவக்கு பொலீஸ்மா அதிபராக மீண்டும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவால் நியமிக்கப்பட்டதை எதிர்த்து ஸ்டான்லி ஜயவீர உட்பட சில ராஜரீக பிரபலங்களால் மேற்படி மனு தாக்கல் செய்யப்பட்டது.

இம்மனு தொடர்பாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் நியமனங்கள் குறித்து கேள்வி எழுப்புவது நீதிமன்ற நியாயாதிக்கத்துக்கு உட்பட்டதல்ல என்று அரசுத் சட்டத்தரணி சி.ஆர்.டி.சில்வா தெரிவித்திருந்தார்.

பொலீஸ் மா அதிபரின் நியமனம் அரசமைப்பின் 17 ஆவது திருத்தச் சட்டத்தின்கீழ் வருவதால் ஜனாதிபதியின் அதிகாரம் பற்றிய கேள்விக்கு இங்கு இடமில்லை என்று தெரிவித்த நீதியரசர் சிரியானி திலகவர்தன அந்த ஆட்சேபத்தை நிராகரித்தார்.

பொலீஸ் மா அதிபர், ஜனாதிபதியின செயலாளர், உள்துறை அமைச்சர் ஆகியோருக்கு 'நோட்டீஸ்' அனுப்பவும் நீதியரசர் உத்தரவிட்டார். (க-ஒ)

## வன்னியில் புலிகளின் பிரதேசத்தில் வசிக்கும்

# இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்க அங்கேயே அரிசி கொள்வனவு செய்ய அனுமதி

கொழும்பு,பெப்.7

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பகுதியில் வாழும் இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் உணவு நிவாரணத்திற்குரிய அரிசியை உள்ளூரிலேயே கொள்வனவு செய்ய பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

அரிசியைக் கொள்வனவு செய்வதற்குரிய நிதியையும் வழங்க அரசு இணக்கம் தெரிவித்துள்ளது. அரசின இந்தப் புதிய நடவடிக்கை காரணமாக வவுனியாவிலிருந்து கட்டுப்பாடற்ற பகுதிக்கு அரிசி கொண்டுசெல்லப்படுவது முற்றாக நிறுத்தப்படும். புதிய நடவடிக்கை காரணமாக் கட்டுப்பாடற்ற பகுதியில் உள்ள விவசாயிகள் அதிக நன்மையைப் பெறுவார்கள்.

இதேவேளை - கட்டுப்பாடற்ற பகுதிகளில் வாழும் அகதிகளில் ஒரு பகுதியினருக்கு மாத்திரமே உணவு நிவாரணம் வழங்கப்படுகிறது என்றும் - நிவரணம் பெறத் தகுதியுடைய எத்தனையோ ஆயிரம் குடும்பங்கள் நிவாரணம் கிடைக்காமல் அவலப்படுகின்றன என்றும் முல்லைத்தீவு அரச அதிபர் எஸ்.சுந்தரம் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 29 ஆயிரம் இடம்பெயர்ந்தவர்கள் உள்ளனர். ஆனால் 12 ஆயிரம் குடும்பங்களுக்கு மாத்திரமே உணவு நிவாரணம் வழங்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (க-9)

# இம்மாத நிவாரணப் பொருள்களை வழங்க செயலக அதிகாரிகள் தயார் நிலையில்!

யாழ்ப்பாணம்,பெப்.7

இந்த மாதத்துக்கான உலர் உணவு நிவாரணத்தை உடனடியாக வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் யாவும் யாழ்.செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிவாரணமாக வழங்கப்படவுள்ள பொருள்களை செயலகத்தின் களஞ்சியத்தில் வந்து எடுத்துச்செல்லுமாறு சகல கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுக்குரிய பொருள்களைப் பெற்றவுடன் உடனடியாக நிவாரண விநியோகத்தை ஆரம்பிக்கத் தயாராகவுள்ளன என்றும் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-10)

# திருமலை மீனவர்களும் போராட்டத்தில் குதிப்பர்!

மீன்பிடித் தடைக்கு எதிராக யாழ். மீனவர்கள் மேற்கொண்டுள்ள போராட்டத்தில் தாமும் இணைந்து கொள்ள திருகோணமலை மாவட்ட மீனவர்கள் முடிவுசெய்துள்ளனர்.

திருகோணமலை மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனம் இதனை அறிவித்துள்ளது. நேற்று முன்தினம் நடைபெற்ற சம்மேளனத்தின் பொதுக் கூட்டத்திலேயே இந்த முடிவு ஏகமனதாக எடுக்கப்பட்டது.

யாழ். மீனவர்கள் கடலில் சுதந்திரமாக மீன்பிடிப்பதனை உறுதிப்படுத்துவதற்கான உடன்படிக்கை ஒன்றை புதிய அரசு வெளியிடவேண்டும் என்று சம்மேளனம் வெளியிட்ட ஓர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ். மீனவர்கள் தொடர்ந்து அனுபவித்துவரும் சிரமங்கள் முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும்.

மீனவர்கள் மீதான தடை நீக்கப்படாத பட்சத்தில் நாமும் யாழ். மீனவர்களின் போராட்டத்துக்கு ஆதரவாக இணைந்து கொள்ளவுள்ளோம் என்றும் திருகோணமலை மீனவர் சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது. (ஐ-6)

## துர்நாற்றம்

யாழ்ப்பாணம்,பெப்.7

யாழ்போதனா வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள பிரதான கழிவுநீர் வாய்க்காலில் இருந்து துர்நாற்றம் வீசுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இதன்காரணமாக அப்பகுதியால் செல்லும் மக்களும் அருகில் உள்ள வியாபார நிலையங்களில் பணிபுரிவோரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (க-10)

# தீர்வுக்கான முயற்சிகளில் அரசுடன் இணங்கிப் போவாரா ஜனாதிபதி?

**பொதுத் தேர்தலுக்குப் பின்னர் ஜனாதிபதி தெரிவித்துவரும் சில கருத்துக்கள் இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர புதிய அரசு எடுக்கும் நல்லெண்ண முயற்சிகளை அவர் குழப்பியடித்து விடுவாரோ என்ற சந்தேகத்தை பலர் மத்தியிலும் ஏற்படுத்தி உள்ளது.**

**தற்போதைய நிலையில் நாடாளுமன்றத்தின் அதிகாரத்தையும் மக்கள் விருப்பத்தையும் மீறி நடக்க ஜனாதிபதியால் முடியுமா?**

**அதற்கு அரசமைப்பு எத்தகைய வழியில் அவருக்கு இடமளிக்கின்றது என்பன பற்றி விளக்குகின்றது இக்கட்டுரை.**

இலங்கையில் நீடித்துவரும் சிறுபான்மைத் தமிழர் பிரச்சினைக்கு அமைதி வழியில் நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காணவேண்டும். அதற்காக விடுதலைப் புலிகளுடன் பேசியே இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படும் என்ற கொள்கைகளை முன் வைத்த ஐக்கிய தேசிய முன்னணியும் -

விடுதலைப் புலிகள் மீதான தடைகளை நீக்கி, அவர்களுடன் மட்டும் பேசி நிரந்தர அமைதித் தீர்வு காணவேண்டும், பொருளாதாரத் தடை நீக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்த தமிழர் கூட்டமைப்பும் கடந்த பொதுத் தேர்தலில் பெரு வெற்றிபெற்றதனால் குறித்த கொள்கையை அரச முன்னெடுக்க மக்களாணை வழங்கப்பட்டுவிட்டது. இந்நிலையில், அரசின் இத்தகைய முற்போக்கு நடவடிக்கையை முறியடிக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதற்கு அரசமைப்பின் உறுப்புரைகள் விடைபகரும்.

மக்களாட்சி நாடுகளில் அரசமைப்புச் சட்டத்திற்கு அமையவே ஆட்சி நடைபெறுகின்றது. இலங்கை இதற்கு விதிவிலக்கல்ல. அரசமைப்பானது அந்நாட்டு மக்களால் ஆக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு நடைமுறையிலுள்ள ஒன்றாகும். தம்மை எப்படி ஆளவேண்டுமெனக் கூறி அதற்கேற்ற சட்ட திட்டங்களை அரசமைப்பில் கூறி அதற்கமைய தாம் ஆளப்படுவர் என்ற நம்பிக்கையில் மக்கள் தம் இறைமையை ஒப்படைக்கின்றனர். இந்த அடிப்படையில் அரசமைப்பு விதிகளை ஜனாதிபதியானாலும் சரி, பிரதமரானாலும் சரி, வேறு எவராயினும் சரி மீறவோ, மீறி ஆட்சி நடத்தவோ முடியாது. அரசமைப்பு விதி மீறப்பட்டால் மக்கள் புரட்சி ஏற்பட அது வழிவகுக்கவும் முடியும். கடந்த பொதுத் தேர்தலில் நாட்டை ஆள நாடாளுமன்றுக்கு மக்கள் வழங்கிய ஆணையை மதித்துச் செயல்படும் கடமை ஜனாதிபதிக்கும், நாடாளுமன்றுக்கும் உண்டு.

மிகப் பெறுமதியும் முக்கியத்துவமும் உடைய இலங்கை அரச அமைப்பு (யாப்பு) ஜனாதிபதிக்கா அல்லது நாடாளுமன்றுக்கா தான் விரும்பும் ஆட்சி முறைகளை நிறைவேற்ற அதிகாரங்களை வழங்கியுள்ளது என்ற விடயத்தை நோக்குவோமாயின், முதலில் சட்டவாக்கல் விடயமே மிக முக்கியமாக ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும்.

அரசமைப்பின் 75ஆம் உறுப்புரையின் பிரகாரம் சட்டங்களை ஆக்கும் அதிகாரம் நாடாளுமன்றுக்கு மட்டுமே உண்டு. ஜனாதிபதி நாடாளுமன்ற உறுப்பினரல்லர். நாடாளுமன்றம், அரசமைப்புச் சட்டத்தால் தனக்கு மட்டும் வழங்கப்பட்ட சட்டமாக்கல் தத்துவத்தினை கைதுறக்கவோ, அல்லது பாராதீனப்படுத்தவோ கூடாது என்ற ஏற்பாடு உண்டு. எனினும் இப்பொதுவான விதிக்கு விதிவிலக்காக பொதுமக்கள் பாதுகாப்புச் சம்பந்தமாக அவசரகால நிலையில், அவரசகால விதிகளை ஆக்குவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரத்தை வழங்க தடை ஏதும் கிடையாது.

நாடாளுமன்றம் நிராகரித்த ஏதேனும் அரசமைப்பு விதியுடன் தொடர்புடைய சட்டமூலத்தை அல்லது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த வேறு ஏதேனும் கருமத்தை ஜனாதிபதி தனது தற்துணிவின் பேரில் மக்கள் தீர்ப்புக்கென மக்களிடம் சமர்ப்பிக்கலாமேதவிர தான் விரும்பிய சட்டவிதிகளை தானாக உருவாக்க முடியாது.

அரசமைப்பின் 75, 76, 85 (2) ஆகிய உறுப்புரைகளின்படி சட்டவாக்கல் விடயங்களில் நாடாளுமன்றுக்கும், மக்களுக்கும் மட்டுமே சட்டவாக்கல் தத்துவம் உண்டென்று பொருள்கொள்ளப்படலாம். ஜனாதிபதிதான் மக்கள் முன்னெடுக்கும் சட்டமூலங்களை மக்கள் தமது வாக்களிப்பின் மூலம் நிராகரிக்கவும் முடியும். எனவேதான் சட்டவாக்கல் விடயத்தில் அதிகாரம் படைத்த அமைப்பாக நாடாளுமன்றும், மக்களுமே அமைகின்றனர் எனலாம்.

நாட்டை நிர்வகிப்பதற்கும், நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் ஏற்படுத்துவதற்கும், நாட்டை முன்னேற்றுவதற்கும் தேவைப்படும் நியதிச்சட்டங்களை உருவாக்குவது நாடாளுமன்றமே. நாடாளுமன்றத்தால - மக்கள் தீர்ப்பால் - நிறைவேற்றப்படும், உருவாக்கப்படும் சட்டத்தினைப் பிரயோகித்து நிர்வாகத்தை புரியும் அமைச்சர்களுக்குத் தலைவராக விளங்கும் ஜனாதிபதியும் அமைச்சர்களும் நாடாளுமன்றத்தினதும், அரசமைப்பி

அ.இராஜரட்ணம் எல்.எல்.பி
சட்டத்தரணி
யாழ்.பல்கலைக்கழக சட்ட விரிவுரையாளா (பகுதிநேரம்)

னதும் சட்டங்களுக்கு ஒழுகி நடக்க வேண்டியவர்களாவர். இந்த அடிப்படையில் பார்க்கும்போது ஜனாதிபதியைக் காட்டிலும் நாடாளுமன்றுக்கே கூடிய அதிகாரம் உண்டு எனலாம்.

அரசமைப்பின் 70 (1) உறுப்புரையின் பிரகாரம் ஜனாதிபதியானவர் நாடாளுமன்றைக் கூட்டுமாறு அழைப்பு விடுத்தல், நாடாளுமன்றின் அமர்வுகளை இடைநிறுத்தல் அத்துடன் நாடாளுமன்றைக் கலைத்தல் போன்ற விடயங்களில் தான் விரும்பியபடி செயற்பட முடியாது. அரசமைப்பின் 70 (1) அ.ஆ.இ.ஈ, 70 (2), 70 (3) உறுப்புரைகள் மேற்கூறிய விடயங்களில் மட்டுப்பாடுகளை விதித்துள்ளன. அதாவது பொதுத்தேர்தல் நடைபெற்று ஒரு வருட காலத்துக்குள் நாடாளுமன்றமே தன்னைக் கலைக்கும்படி கோரிக்கை விடுக்காதுள்ள போது, வரவுசெலவுச் சட்டம் ஒருமுறை மட்டும் அங்கீகரிக்கப்படாமல் இருக்கும்பொழுது, அரச கொள்கைக் கூற்று நிராகரிக்கப்பட்டது என்ற காரணங்களின் நிமித்தம் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்க முடியாது. இதேபோல நாடாளுமன்ற அமர்வை இரண்டு மாதங்களுக்கு மேலாக இடைநிறுத்த முடியாது என்னும் வரையறைகள் காணப்படுவதால ஜனாதிபதி மக்களாட்சிக்கு எதிராக தான் விரும்பியபடி நாட்டை ஆள முடியாதெனவே பொருள்கொள்ள இடமுண்டு.

உள்நாட்டிலும் சரி, வெளிநாட்டிலும் சரி இலங்கை அரசின் சார்பாக ஜனாதிபதியால் ஒப்பந்தம், உடன்படிக்கை, இணக்கம் புரியப்பட்டாலும் கூட அவற்றுக்கு நாடாளுமன்றத்தின் அனுமதி, அங்கீகாரம் தேவையாகும். ஆனால் நாடாளுமன்றம், சட்டமூலத்தின் வழியாக வெளிநாட்டுடன் அல்லது உள்நாட்டில் எவருடனோ அல்லது ஏதும் குழுக்களுடனோ சட்டத்திற்கமைய செய்துகொள்ளும் ஒப்பந்தம், உடன்படிக்கை, இணக்கம் என்பன சட்ட வலுவுள்ள பெறுமதி உடைய ஒன்றாகவே கருதப்படும். அல்லது இதேபோல மேற்கூறப்பட்ட விடயங்களுக்கு மக்கள் தீர்ப்பு அங்கீகாரம் இருந்தாலும் அதுவும் சட்ட பெறுமதியானதாகும். இவை மக்கள் விருப்பமாக அமைவதால் ஜனாதிபதி இவற்றை நிராகரித்துச் செயற்பட வழி உண்டெனப் பொருள் கொள்ள முடியாது.

மேன்மை தங்கிய ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரம் கொண்டவராக, முப்படைகளின் தளபதியாக இருப்பதால், தனக்கு விரும்பாத நாடாளுமன்றச் சட்டங்களை அமுல் நடத்துவதில் காலதாமதம் செய்தல் அல்லது பொதுத்தேர்தல் முடிந்து ஒரு வருட காலம் சென்றவுடன் தனக்கு விரும்பாத அரசைக் கலைத்து மறு தேர்தலை நடத்துதல், இரு மாதங்களுக்கு நாடாளுமன்ற நடவடிக்கைகளை ஒத்திவைத்தல், அமைச்சுக்களை தன்வசம் எடுத்துக்கொள்ளல் போன்ற நடவடிக்கைகள்மூலம் அரசுக்கு இடையூறுகளை ஏற்படுத்த அரசமைப்பில் வாய்ப்புக்கள் உண்டு. இவற்றைச் செய்வதால் நாடாளுமன்ற நடவடிக்கைகளை ஓரளவு கட்டுப்படுத்தலாம். ஆனால் இத்தகைய போக்குகளை வேறுநாடுகளின் விடயத்தில் வெளிநாடுகள் அண்மைக் காலங்களில் கண்டித்திருப்பதும் பல நாடுகளில் மக்கள் புரட்சி வெடிக்கக் காரணமாக இருந்ததையும், ஐக்கிய நாட்டுச்சபை ஜனநாயகத்தை நிலைநாட்ட நடவடிக்கைகள் மேற்கொண்டமையையும் சகலருமறிவர்.

விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தை, விடுதலைப் புலிகளின் தடைநீக்கம், பொருளாதாரத் தடை நீக்கம் என்பனவற்றினை ஆதரித்து நிரந்தர சமாதானத்துக்கான வழிகளை அமைத்து, தமிழர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைக்காண விளையும் அரசின் நடவடிக்கைகளுக்கு இடையூறில்லாமல் அனுசரணையாக இருப்பதே ஜனாதிபதிக்கு மரபுரீதியாக உள்ள ஒரு தலையாய கடமையாகும். மாறாக இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகளின் தடையை நீக்கி, அவர்களுடன் பேசி இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு ஒன்றினை காண முயல்வது, நடவடிக்கைகள் எடுப்பது தேசிய நலனைப் பாதிக்கும் என்று ஜனாதிபதி கருதினால் அரசமைப்பின் 85 ஆம் உறுப்புரையின் கீழ் மக்கள் தீர்ப்புக்கு இவ்விடயத்தை சமர்ப்பிக்க வழியுண்டு. தற்போதைய நிலையில் இவ்வாறு இப்பிரச்சினை விடயத்தை மக்கள் தீர்ப்புக்கு முன்வைத்தால் இனவாதம் மக்கள் மத்தியில் நிராகரிக்கப்படலாம். நிராகரிக்கப்பட்டால் ஜனாதிபதி நாடாளுமன்றத்தின் எண்ணத்திற்கும், விருப்பத்திற்கும் அமையவே நடக்கவேண்டியநிலை ஏற்படும் என்பதுடன் மதத் தலைவர்களின் தலையீடுகளுக்கும் அது முற்றுப்புள்ளி வைத்ததாக அமையும். ☆

# சின்னஞ்சிறு விளம்பரம்

## கிரயக்கணக்கியல்

யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ரதிராணி யோகேந்திரராஜாவினால் வெளியிடப்பட்ட B.Com., B.Ad., HNDA, HNDC, HNDM, A/L ஆகிய பரீட்சைகளுக்கான பாடதிட்டத்தை உள்ளடக்கிய கிரயக்கணக்கியல் என்னும் நூல் விற்பனையாகிறது. பிரபல புத்தக சாலைகளில் பெற்றுக்கொள்ளலாம். விவரங்களுக்கு: 15/14A, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (298)

## வகுப்புகள்

தரம் 6-O/L வரையான கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் (மற்றும் ஏனைய பாடங்களுக்குமான) பிரத்தியேக வகுப்புகள் ஒழுங்குசெய்து தரப்படும். தொடர்பு: S.தயாளன், இல. 26/2, சேர் பொன்.இராமநாதன் வீதி, திருநெல்வேலி. (யாழ்பல்கலைக்கழகம் அருகில்). (355)

## மணமகள் தேவை

1970ஆம் ஆண்டு, சுவிஸ் நாட்டில் நிரந்தர பிரஜாவுரிமை பெற்ற, லக்கினத்தில் செவ்வாய் குற்றமுள்ள, கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு தகுந்த படித்த, அழகிய மணமகள் தேவை. தொடர்பு: K.குமாரதாஸன், நீர்வளவு லேன், தும்பளை, பருத்தித்துறை. T.P.070-212247. (361)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், வயது 31, கிரகபாவம் 12, பூசம் 4ஆம் பாதம், செவ்வாய்க் குற்றமற்ற (உயரம் 51/2 அடி), ஆசிரிய மணமகனுக்கு ஆசிரியர் அல்லது அதற்குச் சமமான தொழில்புரியும் மணமகள் தேவை. குடும்ப விரைத்துடன் தொடர்புகொள்ளவும். விள.இல.1452, மே/பா, உதயன். (380)

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வேலை செய்ய 20-40 வயதுக்கு இடைப்பட்ட பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்; நேரில் வரவும். தொடர்பு: இ.வி.ராஜன், நிரு ரியூசன் சென்ரர் முன் ஒழுங்கை, ஸ்ரேசன் வீதி, கோண்டாவில் மேற்கு. (373)

## விற்பனைக்கு

நல்லின மறி ஆடு ஒன்றும் கடாய் ஆடு ஒன்றும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.218, செம்மணி வீதி, நல்லூர். (375)

நல்ல நிலையிலுள்ள C-90 (பற்றறி மொடல்) மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சோ.ரஜதகிரீசன் (கிரிஜயா), (வடலி அம்மன் கோயிலுக்கு அருகாக), மயிலணி, சுன்னாகம். (376)

## தவறிவிட்டது

பண்ணாகம் தெற்கு, சுழிபுரம் என்ற முகவரியைச் சேர்ந்த கந்தசாமி குமரகுரு என்பவருடைய தேசிய அ. அ. (இல. 560151098V), விசேட அ.அ. (இல. 0904015265) என்பன மூளாய் பிள்ளையார் கோயிலுக்கு முன்பாகத் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தாசன் கல்வி நிலையம், பண்ணாகம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (377)

ஆதவன் நிலையம், கரவெட்டி மத்தி, கரவெட்டியைச் சேர்ந்த ஆனந்த குமரசாமி நவஜோதி என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.661832339V), விசேட அ.அட்டை என்பன கடந்த 19.01.2002 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய முகவரியிலோ அல்லது V.சுப்பையா, "கனக சபா", இராஜ வீதி, திருநெல்வேலி கிழக்கு எனும் முகவரியிலோ ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (383)

இல.84, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த, வேலாயுதன் நிமல்ராஜ் என்பவரின் கடவுச்சீட்டு 03.02.2002 ஞாயிறு அன்று சுன்னாகத்துக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவும். (386)

## யாழ்.இந்துவில் செயலமர்வு

யாழ்.இந்துக்கல்லூரியின் தொலைக் கல்வி நிலையப் பயிற்சி ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள பகுதி II இறுதிப் பரீட்சைக்குரிய உள்ளகப் புள்ளிகளை கணனி அட்டையில் பதியவேண்டி உள்ளதால், பயிற்சி ஆசிரியர்களையும் போதனாசிரியர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு சிரேஷ்ட போதனாசிரியர் அறிவித்துள்ளார். (க-10)

# வாழ்த்துகின்றோம்



இன்று (07.02.2002) வியாழக்கிழமை
அகவை அறுபதுகண்ட

## திரு.சின்னத்தம்பி நாகேந்திரம்

*(சில்லறைப் பண்டசாலை மேற்பார்வையாளர்,*
*வலி. கிழ. தெ. ப. ப. நோ. கூ. ச., நீர்வேலி.)*

அவர்கள் பல்லாண்டு காலம் இன்னும் சிறப்புகள் பல பெற்று இனிதுவாழ இறையருளை வேண்டி வாழ்த்துகின்றோம்.

*நீர்வேலி.* (சி-20626) கூட்டுறவாளர்கள், பொதுமக்கள்.

# மூன்றாவது வருட நினைவஞ்சலி

தோற்றம் 29 - 01 - 1949



மறைவு 12 - 01 - 1999

## அமரர் முத்து சின்னத்துரை

ஆண்டுகள் மூன்று மறைந்தாலும் அப்பா! நம்
விழிகளில் ஈரம் இன்னமும் காயவில்லையே!
தாங்காத வேதனையில் தாழாமல் தவிக்கின்றோம் நாம்
நீங்காது உம்நினைவு; ஆத்மா சாந்தி அடைக!

*கொண்டலடி வீதி, நல்லூர்.* (388) பிரிவால் துயருறும்: *மனைவி, பிள்ளைகள்.*

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 14 - 06 - 1940



உதிர்வு 08 - 01 - 2002

அமரர்

## குமாரவரோதயர் சிவபாலசுந்தரம்பிள்ளை

"பழையூர் சுந்தரம்பிள்ளை"

*(இளைப்பாறிய ரயில்வேத் திணைக்கள ஊழியர்)*

பழை தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், திரு வீதி, உரும்பிராய வடக்கை வதிவிடமாகவும் கொண்ட அன்னாரின் மரணச்செய்தி கேட்டு, நேரிலும், தொலைபேசிமூலமும், கடிதம்மூலமும் எம் துயரில கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து, இன்று (07. 02. 2002) வியாழக்கிழமை ஏகாதசி திதியில் அந்தியேட்டிக் கிரியைகள் முகத்துவாரத்தில் நடைபெறும்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*20/2, சிறபுறி காா்டன்ஸ், பம்பலப்பிட்டி, கொழும்பு - 04.* (C/20625) - சகோதரர்கள், சகோதரிகள்.

# துயர் பகிர்கின்றோம்

எமது குருமட மாணவனாகிய
**செல்வன் R.C.ஹெரன்ஸ்சின்**
பாசமிகு தாயார்

## திருமதி இமாகுலேற் றிச்சாட் ஒலிவர்

அவர்களின் மரணச் செய்திகேட்டு கலங்கி நிற்கின்றோம். பிரிவால் கண்ணீர் மல்கும் குடும்பத்தாரோடு எமது ஆழ்ந்த துயரைப் பகிர்கின்றோம். இத்தாயின் பிரிவு இதயத்தைச் சுட்டெரிக்கும் வேதனையைத் தருகிறது. ஆனால் "உயிர்ப்பும் உயிரும் நானே..." என்ற இறைவனில் நாம் அமைதியடைவோம்.

அதிபர், ஆசிரியர்கள், குருமட மாணவர்கள்,
புனித மருத்தீனார் குருமடம்,
யாழ்ப்பாணம்.
(381)

**கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**
(வ.து)
கண்டி வீதி, கொடிகாமம்

# வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் மார்ச் 2ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திற்கு பிரேரணைகளைச் சமர்ப்பிக்க விரும்பும் பொதுச்சபைப் பிரதிநிதிகள் எழுத்துமூலமாக எதிர்வரும் (15. 02. 2002) வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு முன்பாக கீழ்க்குறிப்பிடப்பட்ட விலாசத்திற்கு சங்கச் செயலாளருக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சிநிரல் பின்னர் அறிவிக்கப்படும்.

*குறிப்பு:* இக்கூட்டத்தில் 1993/94, 1994/95, 1995/96, 1996/97, 1997/98, 1998/99, 1999/2000 ஆம் வருட எண்பார்வை அறிக்கைகள் பரிசீலிக்கப்படவுள்ளதால் அறிக்கையைப் பார்வையிட விரும்புவோர் காரியாலயத்தில் தொடர்புகொண்டு பார்வையிடலாம்.

*தற்காலிக முகவரி:*
முடக்காடு வீதி,
நெல்லியடி கிழக்கு, கரவெட்டி. - **செயலாளர்.** (394)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## கதிரவேலு தம்பிப்பிள்ளை

*(ஆசிரியர்)*

தோற்றம் 23.01.1916 மறைவு 31.01.2000


திதி: 07.02.2002

அன்போடும் பண்போடும் வாழ்ந்து மறைந்த ஐயாவே!
நீங்கள் மறைந்து போனாலும் நினைவுகள் மறையவே மறையாது.

*283/2, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.* (390) பிரிவால் துயருறும்: **மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

# 2ஆம் ஆண்டு நினைவுநாள்

மலர்வு 19 - 09 - 1975



உதிர்வு 07 - 02 - 2000

## செல்வன் இராசரத்தினம்பத்தர் சுகந்தன் (குஞ்சன்)

*தம்பி சுகந்தா!*
நீர் எம்மைவிட்டுப் பிரிந்து சென்றாலும்
உமது நினைவுகளிலே வாழும்...

*நேசம் அழகு நகை, பிரதான வீதி, சங்கானை.* - குடும்பத்தினர். (387)

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி மகேந்திரன்

(ஜனாதிபதி சட்டத்தரணி)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட ஜனாதிபதி சட்டத்தரணி சின்னத்தம்பி மகேந்திரன் 05.02.2002 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மலேயன் பென்சனியர் சின்னத்தம்பி - பகவதி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான திசைவீரசிங்கம் - திருமதி அ.திசைவீரசிங்கத்தின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அமிர்தராணியின் (புள்ளி விவரத்திணைக்களம், கொழும்பு) அன்புக் கணவரும் பிரசன்னா (லண்டன்), பிரமிளா (இரண்டாம் வருடம் முகாமைத்துவபீடம், கொழும்பு பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் வரதன் (லண்டன்), தினேஷ் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் திருமதி மகேஸ்வரி பாலகிருஷ்ணனின் அன்புச் சகோதரனும் பேராசிரியர் நா.பாலகிருஷ்ணனின் (வவுனியா வளாகம்) அன்பு மைத்துனரும் இந்திரன் (Union Bank), பிரதாபன் (Sri Lankan Air line), வசந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07-02-2002) வியாழக்கிழமை 34, கொலிங்வூட் பிளேஸ் வெள்ளவத்தையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு தெரியப்படுத்துகின்றோம்.

தகவல்: *ப.சிவநாதன், 55/1 பழம்வீதி, கந்தர்மடம் T.P. 3089* (393) *பேராசிரியர் நா.பாலகிருஷ்ணன்* (மைத்துனர்)

## பொன்னையா கந்தசாமி

*(வாழைப்பழக் கடை உரிமையாளர், பண்டத்தரிப்பு)*

அளவெட்டி வடக்கு, சாத்தா கலட்டியைச் சேர்ந்த பொன்னையா கந்தசாமி 05.02.2002 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பொன்ராசா, குணசீலன், சத்தியசீலன் (பிரான்ஸ்), திருமதி தெ. இந்துமதி, திருமதி ம. கலைமதி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் இராசகுமாரி, சுஜாதாதேவி, சுசிலாதேவி (பிரான்ஸ்), தெய்வேந்திரன், மகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அளவெட்டி வடக்கு, சாத்தா கலட்டி இல்லத்தில் நேற்று (06.02.2002) புதன்கிழமை நடைபெற்றுப் பூதவுடல் கேணிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சாத்தா கலட்டி, அளவெட்டி.* (382) *தகவல் க.பொன்ராசா (மகன்)*

# சைக்கிள் கூடைக்குள் இருந்து சென்ற குழந்தை தூக்கிவீசப்பட்டுப் படுகாயம்!

## ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதி

தென்மராட்சி,பெப்.7

சைக்கிளில் முன்பக்கம் பொருத்தப்பட்டிருந்த கூடைக்குள் இருத்திச் செல்லப்பட்ட மூன்று வயதுப் பெண் குழந்தை சைக்கிள் பள்ளத்தில் வீழ்ந்ததால் தூக்கி வீசப்பட்டு தலையில் படுகாயமடைந்துள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. குடத்தனையைச்சேர்ந்த சிவகரன் சிவிதா என்னும் குழந்தையே காயமடைந்து, மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கூடைக்குள்ளிருந்த பிள்ளைக்கு வெயில் பிடிக்காதிருப்பதற்காகக் குடை விரிக்க முற்பட்டவேளையில் சைக்கிள் வீதியில் உள்ள கிடங்கில் வீழ்ந்து எழும்பியதால் தூக்கி வீசப்பட்ட குழந்தை வீதியில் மோதி தலையில் படுகாயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-117)

## கூடைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.7

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் கூட்டம் ஒன்று எதிர்வரும் சனிக்கிழமை மாலை 5.15 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இச்சங்கத்தில் புதிதாக இணைய விரும்புபவர்களையும் இக் கூட்டத்தில் பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ம-3)

## திரைப்படக்காட்சி

யாழ்ப்பாணம்,பெப்.7

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக் காட்சித் தொடரில் ஷியாம்பெனகலின் (SHYAMBEN-EGAL) 'சுபைதா' (ZUBEIDAA) எனும் ஹிந்தித் திரைப்படம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 10மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. ஆர்வலர்கள் எவரும் கலந்துகொள்ளலாம் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துக்கொள்கின்றார்.

(ம)

## நெல் அறுவடையில் விவசாயிகள் ஈடுபாடு

தென்மராட்சி,பெப்.7

கடந்த வாரம் பெய்த கடும்மழையையடுத்து வெள்ளத்தினுள் சாய்ந்துள்ள நெல் பயிர்களை அறுவடை செய்யும் பணியில் நெற் செய்கையாளர்கள் அவசர அவசரமாக ஈடுபட்டுவருகின்றனர்.

வயல்களின் வரம்புகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் வெட்டப்படும் நெற்பயிரினை வீதிக்குத் தூக்கி வந்து காயப்போடுவதைக் காணமுடிகிறது.

வெள்ளத்தில் காய்ந்துள்ள நெற்பயிர்களை அறுவடை செய்ய அதிக கூலி வழங்க வேண்டியுள்ளதாகவும், வெள்ளம் வற்றும்வரை காத்திருந்தால் நெற்கள் முளைத்து விடும் அபாயம் உள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

(ம-117)

## ஐந்து வீதிகள் திருத்தப்படும்

வலி.தென்மேற்கு,பெப்.7

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை 100 நாள் வேலைத் திட்டத்தின்கீழ் 5 வீதிகள் திருத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட 5 வீதிகளே 5 லட்சம் ரூபா செலவில் திருத்தப்படவுள்ளன.

இதேவேளை -

குண்டும் குழியுமாகவுள்ள நவாலி - வேலக்கை வீதி திருத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அவ்வூர் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

(க-185)

# பாதீனியம் ஒழிப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.7

யாழ்.விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பாதீனிய ஒழிப்பு நடவடிக்கை நாளை வெள்ளிக்கிழமை உரும்பிராயில் இடம்பெறவுள்ளது.

உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் கோயிலடி, சிறுப்பிட்டி மேற்கு ஆகிய பகுதிகளில் நாளையும் -

ஈவினைப்பகுதியில் நாளைமறுதினமும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

சிரமதானம் மூலம் மருந்து விசிறி பாதீனிய ஒழிப்பு நடவடிக்கை இடம்பெறும் என்று உதவி விவசாயப் பணிப்பாளர் (விஸ்தரிப்பு) தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு கோப்பாய்ப் பகுதியில் 'பாதீனியம்' ஒழிப்பு நடவடிக்கை இடம்பெறவுள்ளது.

இதில் கோப்பாய்ப்பகுதி சனசமூக நிலையங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஈடுபடவுள்ளனர்.

(ம-3-10)

## அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு

### அவசர வேண்டுகோள்

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களில் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் போட்டியிட விண்ணப்பித்தவர்கள் உரிய படிவங்களில் கையொப்பம் வைப்பதற்காக இன்று (07-02-2002) வியாழக்கிழமை காலை 8 மணிக்கு 57/48, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள கூட்டணி அலுவலகத்தில் ஒன்றுகூடவும்.

(411) அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்.

## சேவை நலன் பாராட்டு



### திருமதி செல்வநாயகி சண்முகம்

(கனிஷ்ட அதிபர், யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி)

அவர்கள் 31.01.2002 அன்று தனது 37வருட சேவையிலிருந்து இளைப்பாறினார். இதுவரைகாலமும் அவர் எமது பாடசாலையில் தன்னலமற்று ஆற்றிய சேவையைப் பாராட்டுவதோடு, பல்லாண்டு காலம் சிறப்புக்கள் பல பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
(405) யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

## கண்ணீர் அஞ்சலி

யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் கடமையாற்றி ஓய்வுபெற்ற ஆசிரியை

### செல்வி அழகம்மா நல்லதம்பி

அவர்களும்

எமது பாடசாலை பழைய மாணவியான

### செல்வி சாந்தினிதேவி வேலாயுதம்பிள்ளை

அவர்களும்

01.02.2002ஆம் திகதி அகாலமரணமடைந்ததைக் கேள்வியுற்று சொல்லொணாத் துயரடைந்தோம்.

அன்னார்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அவர்களது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

*யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை.* (C/20631)

தலைவர், நிர்வாகக்குழு உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் மாநகர சபை
பாதுகாப்பு உத்தியோகத்தர்
திரு.றிச்சட் ஒலிவரின் அன்பு மனைவி

### திருமதி இமாக்குலேற் ஒலிவர்

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*ஆத்மா சாந்தி அடைவதாக.*

நானாவித இறைவரிப்பகுதி,
இறைவரிப் பரிசோதகர் பகுதி,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.
(404)

## மரண அறிவித்தல்கள்

### சரவணமுத்து செல்லம்மா

(கனகன்புளியடி)

சரசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் துன்னாலை தெற்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து செல்லம்மா 03.02.2002 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் பரமேஸ்வரி (ஆசிரியை, லண்டன்), கந்தசாமி (கந்தர்), இரத்தினசிங்கம் (கிளி) ஆகியோரின் அன்புத் தாயாரும் தம்பித்துரை, தங்கசொரூபி, சந்திராதேவி ஆகியோரின் மாமியாரும் சுதா, மதி, கலா, பத்மகாந்தன், உதயகாந்தன் (லண்டன்), மாலா, மஞ்சு (லண்டன்), மலர், சுபோஜினி (லண்டன்), சியாமினி, சுயந்தன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.02.2002) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
*கிளான், துன்னாலை தெற்கு, கரவெட்டி.*

தகவல்:
ச.இரத்தினசிங்கம் (கிளி)
(மகன்)
(408)

### திருமதி விசாலாட்சி கணேசபிள்ளை

காரைநகர், அருகம்புலத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது இல.12, வைமன் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி விசாலாட்சி கணேசபிள்ளை நேற்று (06.02.2002) புதன்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - காமாட்சி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான சிவகுருநாதர் - சின்னக்குட்டி தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற சி.கணேசபிள்ளையின் (எட்டியாந்தோட்டை, கொழும்பு பிரபல வர்த்தகர்) மனைவியும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, காலஞ்சென்ற கிருஸ்ணமூர்த்தி, காலஞ்சென்ற கதிர்காமதேவி மற்றும் மனோன்மணி, காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் தேவகி (இளைப்பாறிய ஆசிரியை), பேராசிரியர் பரமேஸ்வரன் (மருத்துவ பீடம் யாழ். பல்கலைக்கழகம்), நரேந்திரன் (வர்த்தகர், கொழும்பு), குமரப்பா (கனடா) ஆகியோரின் சகோதரியும் செல்வி ஜெகதாம்பாள், காலஞ்சென்ற செல்வி சாரதாதேவி மற்றும் சிவகுருநாதன் (விரிவுரையாளர், ஆங்கில மொழித்துறை - யாழ்.பல்கலைக்கழகம்), செல்வி சிவஞானசுந்தரி ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி சரஸ்வதியின் அன்பு மாமியும் ஹரிகரன், தேஜோமயானந்தா, ஷாலினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2002) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு இல.12, வைமன் வீதி, நல்லூரிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.12, வைமன் வீதி, நல்லூர்.*

தகவல்:
க.சிவகுருநாதன்
(மகன்)
(410)

நாகம்ஸ் சுன்னாகம்
விஜய், பூமிகா, மோனல், விவேக், வடிவேலு நடிக்க
பத்ரி (ரீகல்)
காட்சிகள்: 11.00, 3.00 (புதியநேரம்) (396)

லஷ்சுமி இணுவில்
இள சோண்டா (ரீகல்)
(மூச்சைத் திணறடிக்கும் மாயின் வேகம்)
காட்சிகள் : 10.30, 2.30, 4.45, 6.30
பாடசாலைகளுக்கு விசேட அனுமதி வழங்கப்படும்.

நிறைஞ்சனாஸ் சங்கானை
விவேக், குஷ்பு, வடிவேலு நடிக்க
விரலுக்கேத்த வீக்கம் (ரீகல்)
தினசரி: 11.00, 2.30, 5.30

ராஜா யாழ்ப்பாணம்
கமலஹாசன், சிம்ரன், ஸ்நேகா, அப்பாஸ் நடிப்பில்
பம்மல் K சம்பந்தம்
தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு: 10.30, 2, 5 (பு.நே.)
08.02.2002 முதல்
பூவெல்லாம் உன் வாசம்

உ
சிவமயம்

## திருமணத் திருமுகமும் வாழ்த்தும்

பேரன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷு வருஷம் உத்தராயணமும் சித்தயோகமும் பவகரணமும் கேட்டை நட்சத்திரமும் கூடிய நன்னாளாகிய தைத் திங்கள் 25ஆம் நாள் இன்று (07-02-2002) வியாழக்கிழமை காலை 10.47 மணிமுதல் 11.52 மணிவரையுள்ள மேஷ லக்கின சுபவேளையில்,


இணுவையூர் சிவஸ்ரீ ந.உருத்திரமூர்த்திக்குருக்கள் தம்பதியரின் கனிஷ்ட புத்திரன்
பிரம்மஸ்ரீ அனந்தமூர்த்தி சர்மா (லண்டன்)
அவர்களுக்கும்

வேலணை பள்ளம்புலம் முருகமூர்த்திகோயில் பிரதமகுருவும் அத்தியடி நடராஜ வீரகத்தி விநாயகர் ஆலயப் பிரதமகுருவுமாகிய சிவஸ்ரீ நா.யோகீஸ்வரக் குருக்கள் தம்பதியரின் பௌத்திரியும் சிவஸ்ரீ வை.ஜீவநாதக் குருக்கள் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரி
சௌபாக்கியவதி ராகினி
அவர்களுக்கும்

கன்னிகாதான பாணிக்கிரஹண மாங்கல்யதாரண விவாகம் இல.14, முதலாவது அவனியு, அசோக் நகர், சென்னை 600 083 ஹோட்டல் கோகுலம் பார்க் காயத்திரி ஏ/சி ஹோலில் நடைபெறுவதையிட்டு புதுமணமக்களை ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி பல்லாண்டுகாலம் சிறப்புற வாழ வேண்டுமென ஆசி கூறி வாழ்த்துகின்றோம்.

*41, புது வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.* (406)

சிவஸ்ரீ நா.யோகீஸ்வரக் குருக்கள் தம்பதிகள்,
மணமகளின் தாய், சகோதரிகள், மாமன்மார், மாமிமார், மச்சாள்மார்.




விடுதலைப் புலிகள் மீதான தடையை அரசு நீக்கக்கூடாது என்பதை வலியுறுத்தி ஜே.வி.பி. நேற்று நுகேகொடையில் பெரும் கூட்டம் ஒன்றை நடத்தியது. கூட்ட மேடையில் ஜே.வி.பி. தலைவர்கள் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம். (ம)

# புரிந்துணர்வு உடன்பாட்டு நடைமுறையை கண்காணிக்க ஸ்கன்டிநேவிய நாட்டவர்

கொழும்பு,பெப்.7

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் கைச்சாத்திடவிருக்கும் புரிந்துணர்வு உடன்பாடு நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணிக்க அமைக்கப்படும் சர்வதேசக் கண்காணிப்புக் குழுவில் ஸ்கண்டிநேவிய நாடுகளின் பிரதிநிதிகளே இடம்பெற விருப்பதாகத் தெரியவந்தது.

இந்தக் குழுவில் பிரிட்டன், இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் இடம்பெறுவதை விடுதலைப் புலிகள் விரும்பாததையடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குழுவில் புலிகள் சார்பில் இருவரும் அரசு தரப்பில் இருவருமாக ஒவ்வொரு மாவட்டத்துக்கும் பிரதிநிதிகள் நியமிக்கப்படவிருக்கின்றனர். (ஐ-3)

நாடக அரங்கக் கல்லூரி

நாடகக் கற்கை நெறி

300

கற்கை 9

விண்ணப்ப முடிவுத் திகதி 15.02.2002

-பதிவாளர்.

## வாசகர்களுக்கு...!

இன்றைய உதயனில் வெளியாகியிருக்கும் ஆசிரிய தலையங்கம் -

மீனவர்களின் மறியற்போர் தொடர்பாக நேற்று பலாலியில் நடத்தப்பட்ட அவசர மாநாட்டின் முடிவில் போராட்டத்தை ஒத்திவைக்க மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் இணக்கம் தெரிவிப்பதற்கு முன்னர் காணப்பட்ட நிலைமையை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்டதாகும்.

## மீனவர்களுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதிகளும் படை அதிகாரிகளுடனான இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளவுள்ளனர்.

குடாக்கடலேரியில் மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள தூரம், நேரம் ஆகியவற்றைத் தளர்த்துவது குறித்து இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-51-180)

## மீன்பிடித் தடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கும் இடையில் உள்ள கடலில் அதிகாலை 4.30 மணி முதல் மாலை 6 மணி வரையும் மீனவர்கள் இடுப்பளவு தண்ணீரில் வலைவீசி மீன்பிடிக்க அனுமதிக்கப்படுவர்.

★ தொண்டமனாறுக்கும் பருத்தித்துறைக்கும் இடைப்பட்ட கடற்பகுதியில் வாரத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் இயந்திரம் பொருத்தப்படாத படகுகள் மூலம் கடலில் ஒன்றரைக் கிலோமீற்றர் தூரம் வரை அதிகாலை 4.30 மணிமுதல் மாலை 6 மணிவரை மீன்பிடிக்க அனுமதிக்கப்படும்.

★ இத்தத் தளர்வுகளை அமுல் செய்யும்போது ஏற்படும் முன்னேற்றங்களைக் கருத்திற்கொண்டு எதிர்காலத்தில் மேலும் தடைகளைத் தளர்த்துவது குறித்து ஆராயலாம்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

மீன்பிடித் தடையைத் தளர்த்துவது தொடர்பாகக் கொழும்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று மாலை மாநாடு ஒன்று இடம்பெற்றது.

முப்படைத் தளபதிகளும் பாதுகாப்பு அமைச்சு உயர் அதிகாரிகளும் அதில் கலந்துகொண்டனர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராசா ஆகியோரும் அங்கு சமுகமளித்திருந்தனர்.

வடக்கில் மீன்பிடித் தடைத்தளர்வுகள் குறித்த முடிவுகள் அந்த மாநாட்டிலேயே அறிவிக்கப்பட்டன.

அமைச்சர் மிலிந்த மொறகொடவை எதிர்வரும் சனிக்கிழமை குடாநாட்டுக்கு அனுப்பி, மீன்பிடித்தடையை மேலும் தளர்த்துவது தொடர்பாக மீனவர் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாட ஏற்பாடு செய்யப்படும என்றும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

அடுத்த இரு வாரங்களுக்குள் இரு தரப்பு நிரந்தர யுத்தநிறுத்தம் அமுலுக்கு வரும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது என்றும் -

எனவே அதன் பின்னர் மீன்பிடித் தடை முழுமையாக நீக்கப்படும் வாய்ப்பு உருவாகும் என்றும் - அந்த மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

தமிழர் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, என்.இரவிராஜ், சந்திரநேரு, தங்கவடிவேல் ஆகியோர் பிரதமருடன் நேற்றுக்காலை நடத்திய சந்திப்பின் பயனாகவே இந்த மாநாடு கூட்டப்பட்டது.

இதற்கிடையில் -

வடக்கில் மீன்பிடிக்க விதிக்கப்பட்டிருந்த தடைகள் தளர்த்தப்பட்டிருப்பதாகத் தெரிவித்து பாதுகாப்பு அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கையில் மீன்பிடித் தடை தளர்வு தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களுக்கும் -

பலாலி படைத் தலைமையகத்தில் நேற்று நடத்தப்பட்ட அவசர மாநாட்டில் மீன்பிடித் தடைத் தளர்வு தொடர்பாகப் படை அதிகாரிகள் மீனவர் சங்கப் பிரதிநிதிகளிடம் தெரிவித்த விளங்கங்களுக்கும் - இடையே முரண்பாடுகள் காணப்படுவதாக மீனவர் சங்க சமாச வட்டாரங்களில் நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-9)

# கொழும்பு வரும் நோர்வேக் குழு இந்தியாவுக்கும் செல்லத் திட்டம்

கொழும்பு,பெப்.7

இலங்கை அரசு மற்றும் எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடத்த இன்று கொழும்பு வரும் நோர்வேத் தூதுக்குழு அதன் பின்னர் இந்தியாவுக்கும் செல்லத் திட்டமிட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

கொழும்பில் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் உட்படப் பலருடன் பேச்சுக்களைத் தூதுக்குழு நடத்தும்.

அதன்பின்னர் இந்தியாவுக்குச் செல்லும் குழுவினர் புரிந்துணர்வு உடன்பாடு குறித்து இந்தியத் தலைவர்களுக்கு எடுத்துக் கூறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம-3)

## அரசு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசுத் தரப்புக்கும் - தமிழ்ப் போராளிக் குழுக்களுக்கும் இடையே 1985இல் இந்திய அரசினால் ஏற்பாடு செய்யப்பட்ட நேரடிப் பேச்சு பூட்டான் தலைநகர் திம்புவில் நடைபெற்று அது பின்னர் தோல்வியில் முடிந்தது தெரிந்ததே. (ஐ)

## இந்த வருட நடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளன என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

முன்னைய அரசைவிட, தற்போதைய அரசின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் புலிகள் அதிகம் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்று எமக்குத் தோன்றுகிறது.

பேச்சுக்கு உகந்த ஒரு சூழலை உருவாக்குவதற்காக பொருளாதாரத் தடையை அரசு நீக்கியமை தமிழர்களைப் பொறுத்தவரையில் மிக முக்கிய நிகழ்வாக எமக்குத் தோன்றுகின்றது.

தற்போது இரு தரப்பினரும் அறிவித்துள்ள போர்நிறுத்தம் ஒரு தலைப்பட்சமானது என்பதால் அதனை முறைப்படியான - அங்கீகாரத்துக்குரிய - ஒரு நிரந்தரப் போர்நிறுத்தமாக மாற்றுவதுதான் எமது இலக்கு. அதற்கான சூழ்நிலைகளை உருவாக்குவதற்கு நாம் தற்போது முயன்று வருகின்றோம். அதுதான் முதலில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை ஆகும்.

அதன் பின்னரே - இரண்டாவது கட்டமாக - இரு தரப்பினரையும் நேரடிப் பேச்சுக்களுக்கு கொண்டுவர நடவடிக்கையை மேற்கொள்ள முடியும்.

எதிர்வரும் கோடைகாலத்துக்கு முன்னர் அதனைச் செய்ய முடியும் என்றே நாம் நம்புகிறோம்.

இரு தரப்பினரையும் இந்த ஆண்டு நடுப் பகுதிக்குள் அதிகாரபூர்வமான சமாதானப் பேச்சை ஆரம்பிக்கச் செய்யமுடியும் என்று நம்புகின்றோம் அவ்வாறான ஒரு சூழலில் இரு தரப்பினருக்கும் இடையில் நோர்வே ஏற்பாட்டாளர்கள் நடுநிலையான மத்தியஸ்தர்களாகச் செயற்படுவார்கள்.

வடக்கு - கிழக்கை இணைத்த தனித்தாயகம் என்ற புலிகளின் நீண்டநாள் கோரிக்கையைக் கைவிடுவதுதான் நீடித்த சமாதானம் ஏற்படுவதற்கான ஒரே யதார்த்தமாக இருக்கும். இதற்கு விடுதலைப் புலிகள் தயாராக இருப்பதாகவே தோன்றுகின்றது.

ஆனால் புலிகளை இந்த நிலைக்குக் கொண்டுவர இலங்கை அரசு ஏராளமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியிருக்கும். அதாவது தமிழர்களுக்கு சம உரிமைகளை வழங்க அரசு முன்வரவேண்டும்.

இருவேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் இருக்கும் ஓர் அசாதாரண சூழ்நிலை தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் அவர்கள் இருவருக்குமே சமாதானத்தை ஏற்படுத்தும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. அதனை அவர்கள் சரியாகப் பயன்படுத்துவார்கள் என்றே நினைக்கின்றேன்.

மத்தியகிழக்கு, கௌதமாலா, சூடான் ஆகிய நாடுகளில் நிலவிய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பங்களித்த மகத்தாக அனுபவம் மிக்க சிறிய நாடு என்ற வகையில் இலங்கை இனப்பிரச்சினையில் மத்தியஸ்தம் வகிக்க வல்லரசு நாடுகளை விட நோர்வேக்கு அதிக தகுதி இருக்கின்றது.

இலங்கையில் சமாதான முயற்சிகளில் நாம் ஏன் ஈடுபடுகின்றோம் என்பதில் எந்தவிதமான சந்தேகங்களும் ஏற்படவேண்டிய தேவை இல்லை. சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக மட்டுமே நாம் இந்த முயற்சியில் இறங்கியுள்ளோம்.

- இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (ம-9)

அநேக மாணவர்களின் எதிர்பார்ப்பிற்கிணங்க

வணிகக்கல்வி

திரு.யசோ

A/L 2003

Part II

ஆரம்பம்: 9.2.02 → Sat. → 8 a.m.

Sat., Sun. → 8-9a.m.

(384)

விக்னா கல்வி நிறுவனம்

எமது புதிய வீடியோ CD வெளியீடு

❖ அங்காள பரமேஸ்வரி

பிரதிகள் உடன் பெறலாம்.

பிரமிட் & Five Star CD வெளியீடு

❖ காற்றுக்கு என்ன வேலி

❖ ஐயப்பா நீதான் மெய்யப்பா

❖ வடுகப்பட்டி மாப்பிள்ளை

வீடியோ விமல்

(C/20632) யாழ்ப்பாணம்.

எமது புதிய வெளியீடு

மீனா, ரோஜா நடிப்பில்

★ அங்காள பரமேஸ்வரி

பிரதிகள் உடன் பெறலாம்.

வீடியோ சிந்து

உரும்பிராய் (C/20633)

புதிய

வீடியோ CD வெளியீடு

சாய்குமார், மீனா, ரோஜா நடித்த

✳ அங்காள பரமேஸ்வரி ✳

பிரதிகளை உடன் பெறலாம்.

அல்டி

எலக்ரோனிக்ஸ்

(C/20634) யாழ்ப்பாணம்.

வெளிநாட்டு பிளாஸ்ரிக் சிகிச்சை நிபுணர்களுடன் வரும்

கண் பரிசோதகர்களின் (INTER-PLAST-U.K.)

இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல்

இடம் : மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை,

இணுவில் மக்லவுட் வைத்தியசாலை

காலம் : மாசி மாதம் 12ஆம் திகதி - 16ஆம் திகதிக்குள்

(திகதி பின்னர் அறிவிக்கப்படும்)

ஆயத்தம் செய்தல்

❋ 'அ' 'இ' பங்கீட்டு அட்டை உள்ளவர்கள் மட்டும்

❋ மாசி மாதம் 7ஆம் திகதி தொடக்கம் 12ஆம் திகதி வரை

மக்லவுட் வைத்தியசாலையில் அல்லது கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையில்

பரிசோதித்து நோயாளர்கள் தெரிவுசெய்யப்படுவர்

❋ கண்பூ (Cataract) உள்ளவர்கள் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள்

❋ 55 வயதுக்குட்பட்டவர்கள் மாத்திரம் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

(கண் பார்வை குறைந்தவர்கள் மட்டும்)

◆ 150 நோயாளர்கள் தெரிவு செய்யப்படுவர் ◆

(378) - வைத்திய அதிகாரி.

## மரண அறிவித்தல்

### முருகேசு நடராசா

(ஓய்வுபெற்ற ஆசிரியர்,

ஸ்ரீ ஞானபண்டிதா வித்தியாசாலை, கொக்குவில்)

கேணியடி, கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட முருகேசு நடராசா அவர்கள் நேற்று (06.02.2002) புதன்கிழமை அதிகாலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும் திருமதி புனிதவதி, புண்ணியமூர்த்தி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற பேராசிரியர் தனஞ்ஜெயராஜசிங்கம், ஸ்ரீசாளினி ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*கேணியடி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*

(398)

தகவல்:-
திருமதி புனிதவதி
(மகள்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.02.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.